




PRGI No. TNBIL/25/A1569

வைகறையில் **பேப்பர்பாய்**

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY








சென்னை மலர்: 01 இதழ்: 253 25.04.2026 சனிக்கிழமை

Chennai Volume: 01 Issue: 253 Saturday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMIL NADU AND PUDUCHERRY


## இன்றைய நாள்

சனிக்கிழமை
(25–04–2026)
பராபவ ஆண்டு, சித்திரை–12
பிறை: வளர்பிறை
திதி
நவமி இரவு 1039 வரை
பிறகு தசமி.

நட்சத்திரம்:
ஆயில்யம் இரவு 11.50 வரை
பிறகு மகம்.

யோகம்
மரண/அமிர்தயோகம்
ராகுகாலம்
காலை 9.00–10.30 மணி.
எமகண்டம்
நண்பகல் 1.30–3.00 மணி.
சூலம் – கிழக்கு

நல்ல நேரம் :
காலை 7–8 மணி.
மாலை 5–6 மணி.

மேஷம் ..................வெற்றி
ரிஷபம்....................கவனம்
மிதுனம் ................ கடமை
கடகம் ................ ஆதாயம்
சிம்மம் .............. உண்மை
கன்னி ............ஆரோக்யம்
துலாம் ................. நன்மை
விருச்சிகம்........... அமைதி
தனுசு ..................மகிழ்ச்சி
மகரம் .....................சிறப்பு
கும்பம்......................புகழ்
மீனம் ....................பயணம்

# வாக்கு எண்ணும் மையங்களில் துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு

## சென்னையில் 83.15 வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணையம் தகவல்





**சென்னை, ஏப்.25:**

தமிழ்நாடு பெருவிழாவான தேர்தல் திருவிழா 23ம் தேதி நடைபெற்றது. சென்னையில் உள்ள 16 தொகுதிகளில் ஆண் வாக்காளர்கள் 13 லட்சத்து 95 ஆயிரத்து 716 பேர், பெண் வாக்காளர்கள் 14 லட்சத்து 96 ஆயிரத்து 921 பேர், திருநங்கை வாக்காளர்கள் 868 பேர் என மொத்தம் 28 லட்சத்து 93 ஆயிரத்து 505 வாக்காளர்கள் தங்கள் ஜனநாயக கடமையை ஆற்றுவதற்காக 975 இடங்களில் 4 ஆயிரத்து 85 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

அதிகபட்சமாக வேளச்சேரி தொகுதியில் 315 வாக்குச்சாவடி மையங்களும், குறைந்தபட்சமாக துறைமுகம் தொகுதியில் 192 வாக்குச்சாவடி மையங்களும் அமைக்கப்பட்டிருந்தன. இந்த ஆண்டு சட்டமன்ற தேர்தலில் முதல் முறையாக 5 அடுக்குமாடி குடியிருப்புகளில் வாக்குச்சாவடி மையமும், அதே போன்று பெண்கள் மட்டும் வாக்களிப்பதற்காக 'பிங்க்' வாக்குச்சாவடி மையங்கள், மாதிரி வாக்குச்சாவடி மையங்களும் அமைக்கப்பட்டிருந்தன.

காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியதில் இருந்து முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள், கர்ப்பிணி பெண்கள் சிரம மின்றி வாக்குப்பதிவு செய்யும் வகையில் சக்கர நாற்காலி வசதிகள் செய்யப்பட்டிருந்தது. முதல் தலைமுறை வாக்காளர்கள், இளம் வாக்காளர்களும் ஆர்வத்துடன் வந்திருந்து, வரிசையில் நீண்ட நேரம் காத்திருந்து தங்கள் வாக்கை செலுத்தினார்கள். கோடை வெயில் கொளுத்தினாலும் சென்னையில் வாக்குப்பதிவு விறுவிறுப்பாக நடந்தது.

சென்னையில் மாலை 6 மணி நிலவரப்படி 83.15 வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணையம் தரப்பில் தகவல் வெளியிடப்பட்டது. கடந்த 2021 சட்டமன்ற தேர்தலில் சென்னையில் 61.90 சதவீதம் வாக்குகள் பதிவாகி இருந்தது. அதன்படி 21.25 சதவீதம் வாக்கு அதிகரித்து உள்ளது. ஒரு விரல் புரட்சி போல் மக்கள் ஆர்ப்பரிப்பால் இந்த வாக்குப்பதிவு சதவீதம் வரலாற்று சாதனையாகவும் பதிவானது.

'சீல்' வைக்கப்பட்ட வாக்குப்பதிவு எந்திரங்கள் துப்பாக்கி ஏந்திய துணை ராணுவ வீரர்கள், போலீஸ் பாதுகாப்புடன் வேனில் ஏற்றப்பட்டு வாக்கு எண்ணும் மையங்களுக்கு எந்திரங்கள் எடுத்து செல்லப்பட்டது. அதன்படி, ஆர்.கே.நகர், திரு.வி.க.நகர், ராயபுரம், துறைமுகம், சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி ஆகிய 5 சட்டமன்ற தொகுதிகளில் பதிவான மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் மெரினா ராணிமேரி கல்லூரி வாக்கு எண்ணும் மையத்துக்கும்,

பெரம்பூர், கொளத்தூர், வில்லிவாக்கம், எழும்பூர், ஆயிரம் விளக்கு, அண்ணாநகர் ஆகிய 6 சட்டமன்ற தொகுதிகளில் பதிவான வாக்குப்பதிவு எந்திரங்கள் நுங்கம்பாக்கம் லயோலா கல்லூரி வாக்கு எண்ணும் மையத்துக்கும், விருகம்பாக்கம், சைதாப்பேட்டை, தியா கராயர்நகர், மயிலாப்பூர், வேளச்சேரி ஆகிய 5 சட்டமன்ற தொகுதிகளில் பதிவான வாக்குப்பதிவு எந்திரங்கள் கிண்டி அண்ணா பல்கலைக்கழக வாக்கு எண்ணும் மையத்துக்கும் எடுத்து செல்லப்பட்டன.

இந்தப்பணி நேற்று காலை 6 மணி வரை நடந்துள்ளது. இதனையடுத்து வாக்குப்பதிவு எந்திரங்கள் ஸ்டார்ங் ரூம்களில் வைத்து, கட்சிகளின் முகவர்கள் முன்னிலையில் சீல் வைக்கப்பட்டன. இந்த 3 மையங்களுக்கும் 5 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இந்த பாதுகாப்பில் 24 மணி நேரமும் துப்பாக்கி ஏந்திய போலீசார் ஈடுபட்டுள்ளனர். மேலும் சிசிடிவி கேமரா மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

வாக்கு எண்ணிக்கை நாளான மே 4-ம் தேதி அன்று இந்த ஸ்டார்ங் ரூம்கள் கட்சிகளின் முகவர்கள் முன்னிலையில் சீல் உடைக்கப்பட்டு வாக்குப்பதிவு எந்திரங்கள், வாக்கு எண்ணிக்கை மையங்களுக்கு எடுத்துச் செல்லப்படும்.

# மேற்கு வங்காளம்: வன்முறை சம்பவங்களுக்கிடையே இதுவரை இல்லாத அளவில் 92.72 சதவீத வாக்குப்பதிவு



**கொல்கத்தா, ஏப்.25:**

மேற்கு வங்காள மாநிலத்தில் 2 கட்டங்களாக சட்டசபை தேர்தல் நடக்கிறது. இதன்படி மாநிலத்தில் மொத்தமுள்ள 294 சட்டசபை தொகுதிகளில் முதல்கட்டமாக 152 இடங்களுக்கு நேற்று வாக்குப்பதிவு நடந்தது. இதை முன்னிட்டு இந்த தொகுதிகளில் நடந்த அனல் பறந்த பிரசாரம் கடந்த 21-ந் தேதி மாலையுடன் ஓய்ந்தது. அத்துடன் வாக்குப்பதிவுக்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் செய்தது.

இதனைத்தொடர்ந்து நேற்று காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியது. அதிகாலையிலேயே வாக்குச்சாவடிகளில் பெரும் கூட்டம் காணப்பட்டது. பின்னர் வாக்குப்பதிவு தொடங்கியதும் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து ஓட்டுப்போட்டனர். இதனால் முதல்கட்ட தேர்தல் நடந்த தொகுதிகள் அனைத்திலும் விறுவிறுப்பான வாக்குப்பதிவு காணப்பட்டது. இதனால் பிற்பகல் 3 மணியளவிலேயே 78 சதவீதத்துக்கு அதிகமான வாக்குகள் பதிவாகி இருந்தது. பின்னர் மாலை 6 மணியளவில் வாக்குப்பதிவு நிறைவடைந்தது. அப்போது 92.72 சதவீத வாக்குகள் பதிவாகி இருந்ததாக தேர்தல் ஆணையம் தெரிவித்தது.

மேற்கு வங்காளத்தில் நடந்த இந்த முதல்கட்ட வாக்குப்பதிவு பெரும்ப லும் அமைதியாக நடந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால் பல இடங்களில் வன்முறை சம்பவங்கள் நடந்ததால் தேர்தல் களத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. குறிப்பாக தக்சின் தினாஜ்பூர் மாவட்டத்தின் குமர்கஞ்ச் தொகுதியில் உள்ள வாக்குச்சாவடி ஒன்றை பார்வையிட சென்ற பா.ஜ.க. வேட்பாளர் சுவேந்து சர்க்காரை மர்ம நபர்கள் சரமாரியாக தாக்கினர்.

திரிணாமுல் காங்கிரஸ் தொண்டர்கள்தான் தன்னை தாக்கியதாக செய்தியாளர்களிடம் தெரிவித்த அவர், சம்பவ இடத்தில் பாதுகாப்பு படையினர் யாரும் இல்லை என்றும் குற்றம் சாட்டினார். இதைப்போல அசன்சோல் தக்சின் தொகுதி பா.ஜ.க. பெண் எம்.எல்.ஏ.வும், வேட்பாளருமான அக்னிமித்ரா பாலின் கார் மீது கற்கள் வீசி தாக்கப்பட்டன.

மேலும் முர்ஷிதாபாத் மாவட்டத்தின் நவோடாவில் ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் மற்றும் ஆம் ஜனதா உன்னாயன் கட்சித்தொண்டர்கள் இடையே மோதல் ஏற்பட்டது. கல் வீச்சு உள்ளிட்ட வன்முறையில் ஈடுபட்டதால் பாதுகாப்பு படையினர் தடியடி நடத்த வேண்டிய சூழல் ஏற்பட்டது. பிர்பும் மாவட்டத்தின் லாபூர் மற்றும் மால்டாவின் சஞ்சலில் பா.ஜ.க. வேட்பாளர்களின் முகவர்கள் தாக்கப்பட்டதால் பரபரப்பு உருவானது.

கூச்பெகர் மாவட்டத்தின் வாக்குச்சாவடி அருகே சாலையை திரிணாமுல் காங்கிரஸ் தொண்டர்கள் தடுப்புகளை ஏற்படுத்தி மறித்தனர். அங்கும் பா.ஜ.க. மற்றும் ஆளும் கட்சியினர் இடையே மோதல் ஏற்பட்டது. இவ்வாறு தேர்தல் நடந்த பல மாவட்டங்களில் இருந்தும் ஏராளமான புகார்கள் வந்தன. அந்தவகையில் 12 மணிக்குள்ளாகவே சுமார் 500 புகார்கள் வந்ததாக தேர்தல் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த வன்முறை சம்பவங்கள் தொடர்பாக ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் மீது பா.ஜ.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டின. ஆனால் அவற்றின் புகாரை ஆளுங்கட்சி மறுத்துள்ளதுடன், தேர்தல் அமைதியாக நடந்ததாகவும் கூறியுள்ளது. பின்னர் மாலையில் வாக்குப்பதிவு நிறைவடைந்ததும் வாக்குப்பதிவு எந்திரங்கள் அனைத்தும் மூடி சீல் வைக்கப்பட்டு வாக்கு எண்ணும் மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

முதல்கட்ட தேர்தல் நடந்த தொகுதிகளில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன. குறிப்பாக சுமார் 2.50 லட்சம் துணை ராணுவப்படையினர், மாநில போலீசாருடன் இணைந்து பாதுகாப்பு பணிகளை மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது.

# தேசிய பஞ்சாயத்து ராஜ் தினம்: மோடி வாழ்த்து





**புதுடெல்லி, ஏப்.25:**

இந்தியாவில் ஆண்டுதோறும் ஏப்.24-ம் தேதி தேசிய பஞ்சாயத்து ராஜ் தினம் கொண்டாடப்படுகிறது.

தேசிய பஞ்சாயத்து ராஜ் தினமானது 1992-ம் ஆண்டு இயற்றப்பட்ட 73-வது அரசியலமைப்பு திருத்தச்சட்டம் சட்டம் 1993-ம் ஆண்டு ஏப்.24-ம் தேதி முதல் நடைமுறைக்கு வந்ததை குறிப்பதற்காக கொண்டாடப்படுகின்றது.

முதல் தேசிய பஞ்சாயத்து ராஜ் தினமானது 2010-ம் ஆண்டு கொண்டாடப்பட்டது.

இந்தநிலையில் தேசிய பஞ்சாயத்து ராஜ் தினத்தையொட்டி பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளதாவது:-

தேசிய பஞ்சாயத்து ராஜ் தினத்தையொட்டி நாட்டின் மக்கள் பிரதிநிதிகளுக்கு வாழ்த்துகள்.

பொதுச்சேவையிலும் தேசிய சேவையிலும் உங்கள் அர்ப்பணிப்பு அனைவருக்கும் உத்வேகமளிக்கிறது என அதில் பதிவிட்டுள்ளார்.

# பெட்ரோல், டீசல் விலை உயர்த்தும் திட்டம் இல்லை: பெட்ரோலிய அமைச்சகம் அறிவிப்பு

**புதுடெல்லி, ஏப்.25:**

உலகம் முழுவதும் எரிபொருள் விநியோகம் பாதிக்கப்பட்டு சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை பேரலுக்கு 70 அமெரிக்க டாலரில் இருந்து 119 டாலர் வரை ஏற்ற இறக்கத்துடன் காணப்படுகிறது. இதனால் உலகின் பல நாடுகளில் பெட்ரோல், டீசல் விலை அதிகரித்தது. ஆனால், இந்தியாவில் மட்டும் பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்படவில்லை. இந்நிலையில் சட்டப்பேரவைத் தேர்தல் முடிந்த பிறகு பெட்ரோல், டீசல் விலை லிட்டருக்கு ரூ.25 முதல் ரூ.28 வரை உயர்த்தப்படலாம் என கோடக் பங்குகள் நிறுவனம் அறிக்கை வெளியிட்டிருந்தது.

இதுகுறித்து பெட்ரோலியம் மற்றும் இயற்கை வாயு அமைச்சகம் எக்ஸ் தளத்தில் வெளியிட்ட தகவலில் கூறியிருப்பதாவது: பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்படும் என சில தகவல்கள் வெளியாகியுள்ளன. இது போன்ற திட்டம் எதுவும் மத்திய அரசிடம் இல்லை. மக்கள் இடையே பீதியை ஏற்படுத்துவதற்காக இதுபோன்ற தவறான தகவல்கள் பரப்பப்படுகின்றன. கடந்த 4 ஆண்டுகளில் பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்படாத ஒரே நாடு இந்தியா தான். சர்வதேச சந்தையில் ஏற்பட்டுள்ள கச்சா எண்ணெய் விலை உயர்வால், இந்திய மக்களை பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசும், பொதுத் துறை எண்ணெய் நிறுவனங்களும் எடுத்துள்ளன. இவ்வாறு பெட்ரோலிய அமைச்சகம் தெரிவித்து உள்ளது.

# தமிழ்நாட்டில் தேர்தல் நடத்தை விதிகளில் தளர்வு



**சென்னை, ஏப்.25:**

சட்டமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு 23ம் தேதி ஒரே கட்டமாக நடைபெற்றது. காலை 7 மணியில் இருந்தே வாக்காளர்கள் வருகை அதிகரித்து காணப்பட்டது. இளைஞர்கள், இளம்பெண்கள் உற்சாகத்துடன் வாக்குச்சாவடிகளுக்கு வந்து வாக்களித்தனர். சட்டசபை தேர்தலில் வரலாற்று சாதனையாக தமிழகத்தில் 85.15 சதவீத வாக்குகள் பதிவானது.

இதற்கிடையில், தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதையடுத்து தமிழகத்தில் தேர்தல் நடத்தை விதிகள் அமல்படுத்தப்பட்டன. வாக்காளர்களுக்கு பணம், பரிசு பொருட்கள் வழங்குவதை தடுக்க தேர்தல் பறக்கும் படையினர், நிலையான கண்காணிப்பு குழுவினர் தமிழகம் முழுவதும் வாகன சோதனை நடத்தி தீவிரமாக கண்காணித்து வந்தனர். பணம் கொண்டு செல்வதற்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

இந்த நிலையில், தமிழ்நாட்டில் வாக்குப்பதிவு நிறைவை அடுத்து, தேர்தல் நன்நடத்தை விதிகளில் தளர்வு அளிக்கப்பட்டுள்ளது. பறக்கும் படைகள், நிலையான கண்காணிப்புக் குழு திரும்பப் பெறப்பட்டன. அனைத்து பூத்களிலும் பதிவான வாக்கு விபரங்களை தேர்தல் பார்வையாளர்கள் இன்று சரிபார்ப்பார்கள். இதில் குளறுபடி கண்டறியப்பட்டால் அந்த பூத்தில் மறுவாக்குப்பதிவு நடத்த தேர்தல் ஆணையத்திற்கு பரிந்துரை செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை எந்த வாக்குச்சாவடியிலும் மறு வாக்குப்பதிவுக்கு அவசியம் இல்லை என்றும் தமிழகத்தில் மொத்தம் 62 வாக்கு எண்ணிக்கை மையங்கள் மைக்கப்பட்டுள்ளதாகவும், வாக்கு எண்ணிக்கை மையங்களில் துணை ராணுவம், போலீசார் இணைந்து 3 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.




# வரத்து அதிகரிப்பு- மல்லிகை பூ விலை கிலோ 280 ரூபாயாக சரிவு



**சேலம், ஏப்.25:**

சேலம் வ.உ.சி. மார்க்கெட்டிற்கு சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி உள்பட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஆந்திரா, கர்நாடகா உள்பட வெளிமாநிலங்களில் இருந்தும் பூக்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன.

இந்த பூக்களை சேலம் மற்றும் சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் அதிக அளவில் வாங்கி செல்கிறார்கள். குறிப்பாக மல்லிகை பூக்கள் வரத்து அதிகரித்துள்ளதால் அதிக அளவில் மல்லிகைப்பூக்கள் விற்பனைக்கு குவித்து வைக்கப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக கடந்த மாதம் ஆயிரம் ரூபாய்க்கு மேல் விற்பனையான மல்லிகைப்பூ விலை படிப்படியாக சரிந்தது. பூக்கள் வரத்து தற்போது மேலும் அதிகரித்துள்ளதால் அதன் விலை கணிசமாக சரிந்துள்ளது. அதன்படி ஒரு கிலோ மல்லிகை பூ நேற்று 320 ரூபாய்க்கு விற்ற நிலையில் இன்று காலை 280 ரூபாயாக சரிந்தது.

இதே போல முல்லை பூ ஒரு கிலோ ரூ.120, காக்காட்டான் 160, கலர் காட்டான் 80, மலைக்காட்டான் 160, அரளி 60, நந்தியாவட்டம 160 ரூபாய்க்கும் விற்பனையானது. பூக்கள் விலை குறைந்ததால் வியாபாரிகள் மற்றும் பொது மக்கள் அதிக அளவில் வாங்கி சென்றனர்.

# "வருமான வரித் துறை சோதனை... இது தேர்தல் நேர வன்கொடுமை!" - செல்வப்பெருந்தகை காட்டம்



**சென்னை, ஏப்.25:**

"எத்தனை எதிர்க்கட்சி தலைவர்கள் வீட்டில் சோதனை நடத்தியுள்ளனர் என்பதற்கான வெள்ளை அறிக்கையை வருமான வரித் துறையினர் வெளியிட வேண்டும்" என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் அவர் இன்று செய்தியாளர்களிடம் அவர் கூறும்போது, "ஜனநாயகக் கடமையை ஆற்றிய தமிழ்நாட்டு வாக்காளர்களுக்கு நன்றி. மத்தியில் பாஜக அரசு கொண்டு வர முயன்றது பெண்களுக்கான இடஒதுக்கீடு மசோதா அல்ல. அது ஓர் ஏமாற்றும் மசோதா. உண்மையான மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை பஞ்சாயத்து ராஜ் மூலம் கொண்டு வந்தவர் மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்த்.

கடந்த வாரம் ராகுல் காந்தி பிரச்சாரத்துக்கு வந்தபோது, வெளிமாநில அதிகாரிகள் சிலர் எங்கள் இடங்களில் முற்றுகையிட்டனர். குறிப்பாக, எனது தேர்தல் பொறுப்பாளர் மனோகரன் என்பவரது இடத்தில் அதிகாரிகள் சோதனை நடத்தியுள்ளனர்.

நான் தேர்தல் பரப்புரைக்கு வெளியில் சென்ற நேரத்தில் அலுவலகம் சென்ற அதிகாரிகள் எங்கள் அலுவலக சிசிடிவி-யை சுவிட்ச் ஆஃப் செய்துள்ளனர். எதற்காக சிசிடிவி-யை ஆஃப் செய்ய சொன்னீர்கள்? ஒரு ஜனநாயக நாட்டில் வெளிப்படைத் தன்மையுடன் அதிகாரிகள் சோதனை நடத்த வேண்டும்.

மேலும், சோதனையில் பணம் கிடைக்கவில்லை என்றதும், பின்னர் சிசிடிவியை ஆன் செய்து பதிவுகளைக் கேட்டு ஆய்வு செய்துவிட்டு, அதிலும் ஒன்றும் கிடைக்கவில்லை என்றதும் சோதனைக்கு வந்த அதிகாரிகள் வெளியேறியுள்ளனர். அப்போது நடந்தவை காட்சிகளாக சிசிடிவியில் பதிவாகியுள்ளது.

ஆனால், எனக்கு சம்பந்தப்பட்ட இடங்களில் எங்கும் சோதனை நடத்தவில்லை என்று வருமான வரித் துறை அதிகாரிகள் கூறியுள்ளனர். நான் பிரச்சாரத்தில் இருந்த சமயம் எனது ஸ்ரீபெரும்புதூரில் தொகுதியில் ஏப்ரல் 19, 20 தேதிகளில் நடைபெற்ற சோதனையில் எனது அலுவலகத்தில் இருந்த என்ன பொருட்களை எடுத்து சென்றார்கள் என்பது எனக்கு தெரியவில்லை.

மேலும், எனது ஆதரவாளர்கள் இடங்களிலும் பல கட்ட சோதனை நடைபெற்றது. இருப்பினும் சோதனையில் எந்த பொருட்களும் கிடைக்கவில்லை. தேர்தல் நேரத்தில் இது போல் ஒரு நடவடிக்கை என்பது வன்கொடுமை. இது குறித்து கேள்வி எழுப்பினால், எங்கள் மீதே வருமான வரித் துறையினர் புகார் கொடுத்துள்ளனர்" என்றார்.

வருமான வரித் துறையினர் சோதனை நடத்தியதாக கூறி சிசிடிவி வீடியோ ஒன்றை வெளிட்டு தொடர்ந்து பேசிய செல்வப்பெருந்தகை, "இந்த ஆதாரத்தை நேற்றைய தினமே வெளியிட்டால், தேர்தல் ஸ்டன்ட் அடிப்பதாக விமர்சனம் செய்வார்கள். அதனால், வாக்குப் பதிவு நிறைவு பெற்ற பின்னர் இன்று சிசிடிவி பதிவு வெளியிடுகிறோம்.

அதிகாரிகள் மீது நாங்கள் குற்றச்சாட்டு வைக்க விரும்பவில்லை. ஏனென்றால், அவர்கள் ஆட்சியாளர்கள் மூலம் ஏவி விடப்படுகிறார்கள். உன்மையாக இருந்தால் பத்திரிகையில் வெளிப்படையாக கூறி இருக்கலாம். ஏன் கூறவில்லை?

நான் வெளிப்படையாக வேண்டுகோள் விடுக்கிறேன். வருமான வரித் துறையினர் எத்தனை மதச்சார்பற்ற கூட்டணி வேட்பாளர்கள் வீடுகளில் சோதனை நடைபெற்றது, எத்தனை அதிமுக தலைமையிலான கூட்டணி கட்சி வேட்பாளர்கள் வீட்டுகளில் சோதனை நடைபெற்றது என்பது குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும்.

அதன் மூலமாகவே, தமிழக வேட்பாளர்கள் மீது டெல்லி தலைமை காழ்ப்புணர்ச்சியுடன் செயல்படுகிறது என்பது நாட்டு மக்களுக்கு தெரியவரும்.

மல்லிகர்ஜுனா கார்கே, வருமான வரித் துறையை சோதனையை கண்டித்து "ஜனநாயக நாட்டில் அதிகாரிகளை வைத்து மிரட்டுவதும் ஒருவித தீவிரவாதம் தான்" என்று கூறியதற்கு தேர்தல் ஆணையம் விளக்கம் கேட்டுள்ளது.

சோதனை என்ற பெயரில் மக்களை அதிகாரிகள் அச்சுறுத்துவது என்பது மிகவும் மோசமானது.

மத்தியில் ஆட்சி மாற்றம் ஏற்படும் என்று கூறுகின்றனர், கண்டிப்பாக 5 மாநிலத் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு சந்திரபாபு நாயு, நிதிஷ் குமார் ஆகியோர் தயாராக இருக்கின்றனர். ஒரு நிமிடத்தில் மத்தியில் ஆட்சி அமைக்கப்படும்" என்று செல்வப்பெருந்தகை கூறினார்.

# கோடநாடு கொலை, கொள்ளை வழக்கு விசாரணையை ஜூன் 19ம் தேதிக்கு உதகை நீதிமன்றம் ஒத்திவைப்பு!!




**நீலகிரி, ஏப்.25:**

கோடநாடு கொலை, கொள்ளை வழக்கு விசாரணையை ஜூன் 19ம் தேதிக்கு உதகை நீதிமன்றம் ஒத்திவைத்தது. கோடநாடு வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட சயான், ஜித்தின் ஜாய் ஆகியோர் ஆஜராகினர். குஜராத் ஆய்வகத்தில் இருந்து அறிக்கை கிடைக்க தாமதமாவதால் அரசு தரப்பில் அவகாசம் கேட்கப்பட்டது. அரசு தரப்பு கோரிக்கையை ஏற்று வழக்கு விசாரணையை ஜூன் 19 தேதிக்கு நீதிமன்றம் தள்ளிவைத்தது.

# கொல்கத்தாவின் ஹூக்ளி நதியில் படகுப்பயணம் செய்த பிரதமர் மோடி



**ஹூக்ளி , ஏப்.25:**

மேற்கு வங்கத்தில் சட்டமன்றத் தேர்தல் முதல்கட்ட வாக்குப்பதிவு நேற்று நடைபெற்றது.

இந்த நிலையில் கொல்கத்தா சென்ற பிரதமர் நரேந்திர மோடி அங்குள்ள ஹூக்ளி ஆற்றங்கரையில் நேரத்தைச் செலவிட்டார்.

ஹூக்ளி நதியில் படகுப் பயணம் மேற்கொண்ட அவர் நதியில் முக்கிய இடங்களை தனது கேமராவில் படம் பிடித்து மகிழ்ந்தார். இது தொடர்பான புகைப்படங்களை அவர் எக்ஸ் தளத்தில் பகிர்ந்து உள்ளார்.

அதில் அவர் ஹூக்ளி நதி மேற்கு வங்கத்தின் கலாச்சாரத்துடன் பின்னிப் பிணைந்துள்ளது. வங்காளிகளின் வாழ்வில் கங்கைக்கு ஒரு சிறப்பு இடம் உண்டு, அதன் நீர் ஒரு பண்டைய நாகரிகத்தின் ஆன்மாவைத் தன்னகத்தே கொண்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

மற்றொரு பதிவில் அவர் "ஒவ்வொரு வங்காளிக்கும் கங்கை ஒரு மிகச் சிறப்பான இடத்தைப்பிடித்துள்ளது.கங்கை வங்காளத்தின் ஆன்மாவில் பாய்கிறது என்று கூறலாம். அன்னை கங்கைக்குத் தனது நன்றியைத் தெரிவிப்பதற்காக ஹூக்ளி நதிக்கரையில் நேரம் செலவிட்டேன் என்றும் கூறியுள்ளார்.

இந்தப் பயணத்தின்போது, பிரதமர் ஆற்றங்கரையோரம் படகோட்டிகள் மற்றும் காலை நடைப்பயிற்சி மேற்கொண்டவர்களுடன் கலந்துரையாடினார். படகோட்டிகளின் கடின உழைப்பைப் பாராட்டிய அவர், மேற்கு வங்கத்தின் வளர்ச்சிக்கான மத்திய அரசின் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்த இந்த கலந்துரையாடல் தனக்கு மற்றொரு வாய்ப்பை வழங்கியதாகக் கூறினார்.

இதனை எக்ஸ் தளத்தில் அவர் "கடின உழைப்பு போற்றத்தக்க படகோட்டிகளையும், காலை நடைப்பயிற்சி மேற்கொள்பவர்களையும் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது.

ஹூக்ளி நதிக்கரையில், மேற்கு வங்கத்தின் வளர்ச்சிக்காகவும், மாபெரும் வங்காள மக்களின் செழிப்புக்காகவும் உழைப்பதில் எங்களது உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினோம்," என்று குறிப்பிட்டு உள்ளார்

# மாற்றத்திற்காக வாக்களித்த மக்களுக்கும், கடுமையாக உழைத்த பாமக, கூட்டணி கட்சியினருக்கும் நன்றிகள்!- அன்புமணி

**சென்னை, ஏப்.25:**

பா.ம.க. தலைவர் அன்புமணி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் 85.12% வாக்குகள் பதிவாகியிருப்பதாக தேர்தல் ஆணையம் தெரிவித்திருக்கிறது. தமிழ்நாட்டில் தேர்தல் வரலாற்றில் இந்த அளவு வாக்குகள் பதிவாகியிருப்பது இது தான் முதல் முறையாகும். தமிழ்நாட்டில் திமுக ஆட்சிக்கு எதிராக மக்கள் பெரும் கொந்தளிப்பில் இருந்தனர்; திமுக ஆட்சியை அகற்றுவதற்காக திரண்டு வந்து வாக்களித்துள்ளனர் என்பதையுமே இது காட்டுகிறது.

தமிழ்நாட்டு மக்கள் எப்போதுமே ஜனநாயகத்தை மதிப்பவர்கள்; அமைதிப்புரட்சி செய்பவர்கள். இப்போதும் அதைத் தான் நிகழ்த்திக் காட்டியிருக்கிறார்கள். திமுக ஆட்சிக்கு வந்த நாள் முதலாகவே மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் அரசால் கட்டவிழ்த்து விடப்பட்டன. இன்னொருபுறம் சட்டம்-ஒழுங்கை பாதுகாத்தல், கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்களை கட்டுப்படுத்துதல், பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்தல், வேலைவாய்ப்பு வழங்குதல் உள்ளிட்ட ஓர் அரசின் அடிப்படைக் கடமைகள் எதையுமே திமுக அரசு செய்யவில்லை. அதனால், கொந்தளித்துப் போன மக்கள் திமுகவுக்கு பாடம் புகட்டுவதற்காக காத்திருந்தனர். மக்கள் தங்களின் உணர்வுகளை அப்பட்டமாக வெளிப்படுத்தாமல், தெளிந்த நீரோடையாக இருந்தாலும், ஆழ்கடலின் பிரளயம் போன்று அவர்களின் மனதுக்குள் திமுகவை இந்தத் தேர்தலில் வீழ்த்த வேண்டும் என்ற கோபம் நீருபூத்த நெருப்பாக கனன்று கொண்டே இருந்தது.



தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மக்களைச் சந்தித்த என்னைப் போன்றவர்களால் இந்த கோபத்தை புரிந்து கொள்ள முடிந்தது. ஆனால், ஆட்சியாளர்களால் இதைப் புரிந்து கொள்ள முடியவில்லை; அதனால் தங்களைத் திருத்திக் கொள்ளவும் இல்லை. எனவே தான் தமிழ்நாட்டு மக்கள் ஏற்கனவே திட்டமிட்டிருந்தவாறு நேற்று நடந்த தேர்தலில் தங்களின் கோபத்தை தீர்ப்பாக வெளிப்படுத்தி விட்டனர். அதன் விளைவு தான் வரலாறு காணாத வகையில் 85.12% வாக்குகள் பதிவாகியிருப்பதாகும்.

இந்த வாக்குகள் ஆட்சி மாற்றத்திற்கான வாக்குகள் தான் என்பதை அனைவராலும் புரிந்து கொள்ள முடிகிறது. இந்தத் தீர்ப்புக்காகத் தான் தமிழ்நாட்டு மக்கள் காத்திருந்தார்கள். இந்தத் தீர்ப்பு தான் தமிழக மக்களுக்கு நரக ஆட்சியிலிருந்து விடுதலை அளிக்கப் போகிறது. இனி வரும் காலம் தமிழ்நாட்டு மக்களுக்கு மகிழ்ச்சியையும், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு பாதுகாப்பையும், அனைவருக்கும் அமைதியான, நிம்மதியான வாழ்க்கையையும் வழங்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. இந்தத் தீர்ப்பை வழங்கிய தமிழ்நாட்டு வாக்காளர்களுக்கு எனது உளமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வயலில் பயிர்கள் செழித்து வளர்ந்திருந்தாலும் அவற்றை அறுவடை செய்து வராவிட்டால் எந்தப் பயனும் இல்லை. அதேபோல் தான் தேர்தல் களமும். மக்கள் மனதில் கனன்ற கோபத்தை ஆட்சியாளர்களுக்கு எதிரான வாக்குகளாக மாற்றியது தான் இந்தத் தேர்தலின் வெற்றி ஆகும். அதற்காக அதிமுக தலைமையிலான கூட்டணியில் அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் மாநிலம் முழுவதும் சுற்றி வந்து தீவிரமாக பரப்புரை செய்தனர்; அதேபோல், பாட்டாளி மக்கள் கட்சி உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளின் அனைத்து நிலை நிர்வாகிகளும் எந்தத் தொகுதியில் எந்தக் கட்சி வேட்பாளர் போட்டியிடுகிறார் என்பதையெல்லாம் மனதில் கொள்ளாமல் கூட்டணி வெற்றி பெற வேண்டும் என்பதற்காக கடுமையாக உழைத்தார்கள். இதற்காக அவர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக பாட்டாளி மக்கள் கட்சியினர் இந்தத் தேர்தலில் காட்டிய வேகமும், விவேகமும் என்னை மெய்சிலிர்க்க வைத்தது. பாட்டாளி மக்கள் கட்சியின் அடிமட்டத் தொண்டர்கள் எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் எல்லா தொகுதிகளிலும் பலமுறை வீடு வீடாக சென்று கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்களுக்காக வாக்குகளைச் சேகரித்தனர். பல்வேறு தரப்பினராலும் ஏற்படுத்தப்பட்ட தடைகளையும், முட்டுக்கட்டைகளையும் தகர்த்தெறிந்து பா.ம.க மற்றும் கூட்டணி கட்சியினரின் வெற்றிக்காக கடுமையாக உழைத்த பாட்டாளி மக்கள் கட்சியின் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளை அளவிலான அனைத்து நிலை நிர்வாகிகளுக்கும், பாட்டாளி மக்கள் கட்சியின் அனைத்து இணை மற்றும் சார்பு அமைப்புகளைச் சேர்ந்த அனைத்து நிலை நிர்வாகிகளுக்கும் எனது சிறப்பு நன்றிகளையும், பாராட்டுகளையும் உரித்தாக்கிக் கொள்கிறேன்.

# வேதாரண்யத்தில் உப்பு உற்பத்தி தீவிரம்



**வேதாரண்யம்,ஏப்.25:**

கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்து வருவதால் வேதாரண்யத்தில் உப்பு உற்பத்தி ஜரூராக நடந்து வருகிறது. இந்தாண்டு 6 லட்சம் டன் இலக்கை அடைய தொழிலாளர்கள் மும்முரமாக வேலை பார்த்து வருகின்றனர்.

தமிழ்நாட்டில் தூத்துக்குடிக்கு அடுத்தபடியாக நாகை மாவட்டம் வேதாரண்யத்தில் அதிகளவில் உப்பு உற்பத்தி நடந்து வருகிறது. வேதாரண்யம் அடுத்த அகஸ்தியன்பள்ளி, கடினல்வயல், கோடியக்காடு உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளில் 9000 ஏக்கரில் உப்பு உற்பத்தி நடந்து வருகிறது. இங்கிருந்து தினம்தோறும் லாரிகள் மூலம் ஆந்திரா, கர்நாடகா, கேரளா மற்றும் பல்வேறு மாநிலங்கள், தமிழகத்தின் அனைத்து பகுதிகளுக்கும் உப்பு அனுப்பி வைக்கப்படுகிறது. வேதாரண்யத்தில் ஒவ்வொரு ஆண்டும் 6 லட்சம் டன் உப்பு உற்பத்தி நடைபெறும்.

ஜனவரி மாதம் உப்பு உற்பத்தி முதற்கட்ட பணிகள் துவங்கும்.

ஆனால் வழக்கத்துக்கு மாறாக இந்தாண்டு உப்பு உற்பத்தி துவங்கிய ஜனவரியில் அவ்வப்போது மழை பெய்ததால் 2 முறை உற்பத்தி பாதிக்கப்பட்டது. கடந்த பிப்வரி மாதம் முதல் வெயிலின் தாக்கம் அதிகரித்து வருவதால் உப்பு உற்பத்தி தொடர்ந்து நடந்து வருகிறது. கடந்த 2 வாரமாக வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளது. இதனால் வேதாரண்யத்தில் உப்பு உற்பத்தியில் உப்பள தொழிலாளர்கள் முழுவீச்சில் ஈடுபட்டு வருகின்றனர். இரவு பகல் பாராமல் 24 மணி நேரமும் சிப்ட் முறையில் உப்பு உற்பத்தி பணி நடந்து வருகிறது. தினம்தோறும் வெளி மாவட்டங்களுக்கு உப்பு அனுப்பி வைக்கும் பணியும் ஜரூராக நடந்து வருகிறது. இந்தாண்டு உப்பு உற்பத்தி 6 லட்சம் டன் என்ற இலக்கை எட்டும் என்று தொழிலாளர்கள் கூறினர்.

# தமிழகத்தில் ஜனநாயக கடமையாற்ற வெளிநாட்டில் இருந்து வந்தவர்கள்



**வேலூர், ஏப்.25:**

தமிழக சட்டமன்ற தேர்தல் நேற்று காலை முதல் மாலை வரை நடந்து முடிந்தது. வேலூர் சார்பனாமேடு பகுதியைச் சேர்ந்தவர் விஜயலட்சுமி. இவர் மலேசியாவில் சாப்ட்வேர் கம்பெனியில் பணியாற்றி வருகிறார். சட்டமன்ற தேர்தலில் வாக்களிக்க நேற்று முன்தினம் வேலூருக்கு வந்தார். நேற்று வேலூர் ராமலிங்கம் மெட்ரிக்குலேஷன் பள்ளியில் வாக்களித்தார். பின்னர், விஜயலட்சுமி கூறுகையில், 'நான் மலேசியாவில் சாப்ட்வேர் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். நேற்று முன்தினம் தான் மலேசியாவில் இருந்து வேலூருக்கு வந்தேன்.

வாக்களிப்பது ஒவ்வொருவரின் கடமைன்னு நினைக்கிறேன். என்னோட கடமையை செய்துவிட்டேன். 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் தேர்தலில், யார் வந்தால் நன்றாக இருக்கும் என்று சிந்தித்து வாக்களிக்க வேண்டும். தேர்தலில் வாக்களிக்க ரூ.40 ஆயிரம் செலவு செய்து வந்துள்ளேன்' என்றார்.

ராணிப்பேட்டை ராணிப்பேட்டை மாவட்டம் நவல்பூர் பகுதியைச் சேர்ந்தவர் முரளி. மின் பொறியாளரான இவருக்கு கடந்த 16 ஆண்டுகளுக்கு முன்பு தாய்லாந்தில் வேலை கிடைத்தது. அவர் தனது குடும்பத்துடன் அங்கு தங்கி பணியாற்றி வருகிறார். இந்நிலையில் தமிழக சட்டமன்ற தேர்தலில் வாக்களிக்க முரளி தனது குடும்பத்துடன் சொந்த ஊருக்கு திரும்பினார்.

தொடர்ந்து நவல்பூரில் உள்ள கங்காதரா நிதியுதவி நடுநிலைப்பள்ளியில் முரளி மற்றும் அவரது மனைவி, மாமியார், மனைவியின் சகோதரி ஆகியோருடன் சென்று தங்களின் வாக்கினை பதிவு செய்து ஜனநாயக கடமையை நிறைவேற்றினர்.

# ஆம் ஆத்மியில் இருந்து விலகிய ராகவ் சத்தா பா.ஜ.க.வில் இணைந்தார்

**டெல்லி, ஏப்.25:**

டெல்லி மதுபான கொள்கை வழக்கில் கடந்த 2024-ம் ஆண்டில் கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால் கைது செய்யப்பட்டார். அப்போது ஆம் ஆத்மி கட்சி சார்பில் பல்வேறு போராட்டங்கள் நடைபெற்றன.

இதில் மாநிலங்களவை எம்.பி.யான ராகவ் சத்தா பங்கேற்கவில்லை. கடந்த பிப்ரவரி மாதம் மதுபான ஒதுக்கீட்டு வழக்கில் கெஜ்ரிவால் விடுதலை செய்யப்பட்டார். அப்போதும் ராகவ் சத்தா எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை. ஆம் ஆத்மியின் வெற்றி கொண்டாட்டங்களில் அவர் பங்கேற்கவில்லை. இதையடுத்து, ஆம் ஆத்மி



மாநிலங்களவை துணைத்தலைவர் பதவியில் இருந்து ராகவ் சத்தா நீக்கப்பட்டார்.

இதற்கிடையே, ஆம் ஆத்மி கட்சியின் செய்தித் தொடர்பாளர் அனுராக் தண்டா வெளியிட்ட செய்தியில், கடந்த சில ஆண்டாகவே நீங்கள் மோடிக்கு எதிராகப் பேச அச்சப்படுகிறீர்கள். நாட்டின் உண்மையான பிரச்சனைகளை எழுப்ப அஞ்சுகிறீர்கள் என கேள்வி எழுப்பினார்.

இந்நிலையில், ராகவ் சத்தா மற்றும் இரு ஆம் ஆத்மி எம்.பி.க்கள் இன்று அக்கட்சியில் இருந்து விலகி பா.ஜ.க.வில் இணைந்தனர்.


திருப்பூர் ரியல் எஸ்டேட் விற்பனை
சிறந்த முதலீட்டு வாய்ப்பு
PREMIUM PLOT SALE
Tiruvallur to Oothukottai Highway NH on Rd Site
VGP THIRU NAGAR, PHASE-1
Location: (Nr Mylapore Jn)
Direction: N/ Face
Total Area: 2400 sft
Price: RS.650/sft
LIMITED PLOTS AVAILABLE!
Contact Us: 9445315510 / 9283257193
VGP Developers - Your Trusted Partner
www.vgpdevelopers.com


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


நிலம் தேவை
தெற்கு சென்னை
திருப்போரூர்
to
செங்கல்பட்டு ரோடு
1 to 2
ஏக்கர்
தொடர்புக்கு:
Ph. 6384617773


நிலம் தேவை
தெற்கு சென்னை
சென்னை
திருப்போரூர்
செங்கல்பட்டு
1 - 2 ஏக்கர்
திருப்போரூர்-
செங்கல்பட்டு
ரோடு
உடனடி தேவை!
தொடர்புக்கு
Ph: 6384617773


Annai Violet
Arts & Science College
(Affiliated to the University of Madras, Co-Ed | NAAC Accredited)
Seek Strive Succeed
Key Features
BANK LOAN
UG & PG COURSES
SHIFT I
B.CA
B.BA
B.Sc COMPUTER SCIENCE
B.Sc BIOCHEMISTRY
B.Sc MICROBIOLOGY
B.A TAMIL
B.A ENGLISH
B.A ECONOMICS
B.COM (GENERAL)
B.COM (ACCOUNTING & FINANCE)
B.COM (CORP. SECRETARYSHIP)
M.A ENGLISH
M.COM
M.Sc BIOCHEMISTRY
SHIFT II
B.Com (GENERAL)
B.Com (ISM)
B.Sc PHYSICS
B.Sc CHEMISTRY
B.Sc COMPUTER SCIENCE
B.Sc VISUAL COMMUNICATION
M.Sc COMPUTER SCIENCE
M.Sc MICROBIOLOGY
CERTIFICATE COURSE
ADMISSIONS OPEN
Ph : 044-26861611 | 26864684 | 9344900911 | 6383425388



WANTED
IMMEDIATE OPENINGS AVAILABLE!
HOUSEKEEPING STAFF
(Male & Female)
MARKETING EXECUTIVE - ELECTRICAL FIELD
(Male & Female)
ELECTRICIAN & HELPERS
(Weekly / Monthly Wages)
ELECTRICAL SUB-CONTRACTOR
DRIVER
GOOD SALARY | FLEXIBLE WORK OPTIONS | IMMEDIATE JOINING
CONTACT NOW: 9363133253
HURRY! LIMITED VACANCIES AVAILABLE!


சிங்கபெருமாள்கோயில்
S.P கோயில். On. GST Road
2 ஏக்கர் விற்பனை
1 ஏக்கர் 25cr
வண்டலூர்
கேளம்பாக்கம் ரோடு
17 ஏக்கர் விற்பனை
1 acre 16 cr
Ph. 9566055082


எலாவூர் மிக அருகில்
சுண்ணாம்பு குளம்
Sqft ₹120/_
(மினிமம்
10000sqft)
Ph.9600660997


உ
முருகன் துணை
A.S.R
ரியல் எஸ்டேட்
காஞ்சிபுரம்
சுலப தவணை உள்ள வீட்டு மனைகள்
வாங்க, விற்க மற்றும் பட்டா மாறுதல்
பெயர் மாற்றம் செய்து தரப்படும்.
காஞ்சிபுரம், செய்யாறு உள்ள வீட்டு மனைகள்
மற்றும் உள்ள அனைத்து மாவட்டகளிலும்
அணுகவும்
7305025591,9578622711


GREEN HOUSING & PROPERTIES
மண்ணும் பொன்னும்
சிறுசேமிப்பு திட்டம் 50 - 50 EMI
OFFER PRICE
ரூபாய்
₹ 1.80
லட்சம்
800 SQFT
FREE FREE!!!
10
கிராம் GOLD COIN
சேமியுங்கள்
VILLA PLOTS FOR SALE
BOOK NOW
+91 77083 95118


அகிலாண்டேஸ்வரி நகரில்
வீட்டு மனைகள் உள்ளது
மனை அளவு
= 30x40 = 1200 ச.அடி
மனை விலை
1,20,000/- மட்டும்
Cell :7305025591
LOCATION


குன்னத்தூர்
உடனடி வேலைவாய்ப்பு
WANTED
டெல்டா டைமண்ட் டூல்ஸ்
சென்னை - குன்றத்தூர்
உதவியாளர் (HELPER)
அடிப்படை அறிவு,
உடல் தகுதி,
அனுபவம் தேவையில்லை
டர்னர் (TURNER)
டர்னர் தொழில்முறை
அனுபவம் தேவை,
வரைபடங்கள் படித்தல்
தகுதி: 10வது / ITI (FITTER/TURNER)
வயது வரம்பு: 18-35
சம்பளம்: நல்ல ஊதியம் + கூடுதல் நன்மைகள்
தொடர்புக்கு / For Details:
pH: 9841738379


துபாயை தலைமையிடமாகக் கொண்டு
தமிழகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள
உட்-பி குளோபல் பிரைவேட் லிமிடெட்
(Would Be Global Pvt Ltd)
ஆன்-லைன் வர்த்தக E-Commerce
நிறுவனத்திற்கு தாலுக்கா வாரியாக
பிரான்ச்சீஸ்கள் (Franchise) தேவை.
பொது மேலாளர்:
7092069555 / 7092047555


just499
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary Unilevel Matrix Board Generation ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


CAR WASH
SADHANA DEVI.K
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081.


THANIGAI
WANTED
REAL ESTATE MARKETING
PART TIME & FULL TIME
Flexible work
No Age Limit /No Investment
No Experience/No Qualification
No Risk / No Target
Simple work - just refer customers only
Office Location : Near Perambur Railway Station
K. Ramakrishnareddy 90879 55111


அருள்தரும் தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
அற்புதமான
ஆன்மீக செய்திகள்,
பரிகாரங்கள்,
ஸ்தல வரலாறு மற்றும்
சுவாரஸ்யமான
தகவல்கள் மாதம்
இருமுறை படித்து
ஆன்மீகத்தை
அறியுங்கள்..
www.arultharumdeivam.com


WANTED
Retd, VRS, Home Makers,
NRIs, Business Person
Contact
8248951872

# கவிதை அரங்கம்!





நீ பேசும் சின்னச் சின்னப்
பொய்களிலும் அழகிய
காதல் ஒளிந்திருக்கிறது.

தொலைவில் நீ
இருந்தாலும், என்
இதயத்துடிப்பு
உனக்காகவே ஒலிக்கிறது.

காதல் என்பது கடலல்ல,
அதில் மூழ்கித் தவிப்பதே
சொர்க்கம்!

உன்னை வர்ணிக்க
வார்த்தைகள் போதாது,
கவிஞர்கள் இன்னும்
பிறக்கவில்லை.

# வாழ்க்கை தத்துவம்...



மற்றவர்களைக் குறை சொல்வதை விட, உன்னைச் செதுக்கிக் கொள்வதில் கவனம் செலுத்து.

சாதிக்கும் வரை உன் கனவுகளை யாரிடமும் சொல்லாதே.

விடாமுயற்சி என்பது ஒரு நாள் வெற்றி தரும் மந்திரம்.

விழுவது தவறல்ல, விழுந்த இடத்திலேயே கிடப்பதுதான் தவறு.

முடியாது என்பது மூடநம்பிக்கை; முடியும் என்பது தன்னம்பிக்கை.

உறவுகள் மற்றும் சமூகம்
அன்பினால் எதையும் மாற்றலாம்; அதிகாரத்தால் எதையும் அடக்க முடியாது.

# சிங்காரம் கடை...

சிங்காரம் கடை என்றால் எங்கள் பகுதியில் தெரியாதவர்களே இருக்க மாட்டார்கள் எங்கள் பகுதியில் ஒரு பள்ளியின் சுவரோரம்தான் சிறியதாக ஒரு தள்ளுவண்டி கடையை ஆரம்பித்தார் சிங்காரம். மலிவான விலையில் இட்லி,தோசை, பரோட்டா ...என்று அவர் கொடுக்க அதையும் சுவை கூடியதாகவும் கூட்டப்பட்டதாகவும், அவருடைய வியாபார தந்திரம் இருந்தது. சுவையின் நிமித்தமாகவே அவர் கடையை, ஈ மொப்பதைப்போல... மக்கள் மொய்த்துக்கொண்டு இருந்தார்கள். வெள்ளை வேட்டி வெள்ளை சட்டை என்று தன்னை ஒரு பெரிய அரசியல்வாதியைப் போலவே காட்டிக் கொள்வார். சிங்காரம். ஒவ்வொரு தேர்தல் காலங்களிலும் ஆட்சி மாற்ற காலங்களிலும் தானும் ஒவ்வொரு கரைவேட்டிகளை மாற்றிக் கொண்டே வருவார். கொஞ்சமும், கூச்சமில்லாமல் ஒவ்வொரு முறையும் அவர் தன் வேட்டியின் கரைகளை மாற்றும்போது, மக்கள் அவரை ஏலனாகமாகவும் கேவலமாகவும் பேசுவார்கள் ஏயேசுவார்கள். அதையெல்லாம் சற்றும் பொருட்படுத்தாமல் சிரித்தவாறு நகர்ந்து விடுவார்.

இருபது வருடங்களுக்கு முன்பு அவர் அவருடைய குடும்பங்களை அழைத்துக் கொண்டு இங்கே வரும்போது அவரிடம் அடுப்பு பற்ற வைக்க ஒரு தீப்பெட்டி கூட இல்லை. என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. ஆனால் மான அவமானங்களை பார்க்காமல் உழைப்பு ஒன்றை மட்டுமே நம்பியதால் இன்று இந்த ஏரியாவில் அவரும் ஒரு மனிதராகி இருக்கிறார் எங்கள் தெருவில் சொந்தமாக ஒரு வீடு பெண்ணுக்கும் பையனுக்கும் திருமணம் என்று எல்லா.... வேலைகளையும் முடித்துவிட்டு இன்று கடையை பார்ப்பது மட்டுமே கண்ணும் கருத்துமாய் இருந்தார்.

எப்போதும் தன்னை எல்லாமும் அறிந்தவன் என்பதை போலவே காட்டிக் கொள்வார் சில பெரிய மனிதர்கள் இவரிடம் வந்து சாப்பிட்டு விட்டு பேசிக் கொண்டிருக்கும்போது மிகுந்த மரியாதையோடு ஐயா..ஐயா... ஐயா...ஐயா....... என்று கூறி பலமுறை அழைப்பார். அவர்கள் பத்தடி தூரம் சற்றே நகர்ந்து சென்றவுடன். தனக்கு அருகே இருப்பவரிடம் மிகவும் கேவலமாக அதோ போகிறானே அவன் யார் என்று தெரியுமா...? அவன் ஒரு மோ சமான பச்சோந்தி என்றும் தனக்கு வாய்க்கு வந்த பேசக் கூடாத வார்த்தைகளை எல்லாம் பேசுவார். அன்று அப்படித்தான் உணவு அதிகாரிகள் அவர்களுடைய கடைக்கு வந்து விட்டார்கள் அவர் கடையை பார்த்து ஏன் எல்லாம் இப்படி இருக்கிறது என்று கேட்டார்கள் அதோடு மட்டும் இல்லாமல் சுகாதார கேடாக எல்லாம் இருக்கிறது என்று கூறி ரூபாய் ஐந்தாயிரம் அவதாரமாக கட்டுங்கள் என்று கூறியபடியே ரசீதை கிழித்து சிங்காரத்தின் கைகளில் திணித்தார்கள்.

இதை சற்றும் எதிர்பாராத சிங்காரம் மிரண்டுதான் போனார். "நானெல்லாம் இப்போது நினைத்தாலும் இந்த அதிகாரிகளை வேலையை விட்டு வீட்டிற்கு அனுப்பி விட....செய்து விட முடியும். இன்றைக்கு எனக்கு இருக்கிற அரசியல் செல்வாக்கிற்க்கு, மாவட்டத்திற்கு ஒரு செய்தி சொன்னால் போதும், உடனடியாக மாவட்டம்,இவர்களுடைய சீட்டை கிழிப்பதற்கு என்ன செய்ய வேண்டுமோ அத்தனையும் செய்து விடுவார். ஆனாலும் கூட... பாவம் அத்தனை தூரம் மெனக்கெட்டு அவர்களுடைய வேலையை கெடுக்க வேண்டுமா என்று தான் நினைக்கிறேன் அதனால்தான் அவர்கள் கேட்ட அவதாரத் தொகையை கட்டித் தொலைத்தேன்" என்றார்

ஆளைக் கண்டால் பம்முவதும், அதே ஆள் தூரச்சென்று விட்டால், அவர்களைப் பற்றி ஆனா ஊனா என்று தகாத வார்த்தைகளாலும், பேசக்கூடாத காது கூசுகிற வார்த்தைகளையும்... பிரயோகப்படுத்தி பிறரை பற்றிய தனது அபிப்பிராயத்தை மிக மோசமாக காட்டிக் கொள்வார் உணவுக்கடை சிங்காரம். பிற மனிதர்களை தரக்குறைவாக பேசுவது சிங்காரத்திற்கு கைவந்த கலையா இருந்தது... இது தவறு என்று பலர் எடுத்து சொன்ன போதும், அவர் அதை புரிந்து கொண்டு நடப்பதாக இல்லை.

அன்று அப்படித்தான் சிங்காரத்தின் வீட்டிற்குள் ஏதோ மிகப்பெரிய பிரச்சனை வெடித்துக் கொண்டிருந்தது....தெருவுக்கே கேட்கின்றபடி சத்தமிட்டு கொண்டார்கள். கிட்டே சென்று என்ன ஏது என்று விசாரித்த போது தான் தெரிந்தது சிங்காரத்தின் மகள் அவர்களுடைய வீட்டில் ஏதோ பிரச்சனை என்று, கோபித்துக் கொண்டு இங்கே வந்து விட்டாள். விளைவு அவர்களுடைய ஊரில் இருந்து மாமனார் மாமியார் வீட்டுக்காரர் என்று எல்லோரும் வந்து விட்டார்கள். சிங்காரம் எவ்வளவு எடுத்துப் பேசியும் அவர்கள் என்ன பேசினார்களோ அதிலேயே நின்று கொண்டிருந்தார்கள் பிறகு தான் தெரிந்தது அது ஒரு வரதட்சனை பிரச்சனை என்று. சிங்காரம் சற்றும் யோசிக்காமல் சம்பந்திகளின் காலில் விழுந்து " இன்னும் கொஞ்ச நாளில் நீங்கள் கேட்ட நகையையும், பணத்தையும் நான் உங்களுக்கு கொடுத்து விடுகிறேன். தயவு செய்து பொருத்தருளி, என் மகளை வாழ வையுங்கள். என்று கெஞ்சியது எங்கள் எல்லோருக்கும் மிகவும் சங்கடமாய் இருந்தது. ஒரு வழியாய்ப்பிரச்சனை சுமூகமாய் முடிந்து சிங்காரத்தின் மகளை, அழைத்துக் கொண்டு அவர்கள் ஊருக்கு கிளம்பி சென்று விட்டார்கள்.

"எனக்கு இருக்கிற அரசியல் செல்வாக்கிற்க்கு நான் இப்போது நினைத்தால் கூட சம்மந்தியாவது கிம்மந்தியாவது என்று கம்பி என்ன வைத்து விட முடியும் . என்ன செஞ்சு தொலைக்க ...?என்னோட பொண்ணோட வாழ்க்கையை பத்தி நாம யோசிக்க வேண்டி இருக்கு... அதனாலதான் அந்த சம்பந்தி கூட்டத்தை, போனா போகட்டும் என்று விட்டுத் தொலைத்து விட்டேன்"என்று சம்பந்திகள் சென்ற பிறகு பின்னால் இப்படி பேசிக் கொண்டிருந்தார் சம்பந்தி குடும்பத்தை பற்றி தவறாக பேசுகிறோம் என்று அவர் நினைக்கவில்லை சம்மந்தி குடும்பம் வரதட்சணை வாங்குவதில் நோக்கமாக இருக்கிறார்கள் என்பதெல்லாம் உண்மைதான். அதை நேர்மையாக நேருக்கு நேராக ...பேசி சமாளிக்க வேண்டும். அதை விடுத்து அவர்களுக்கு முன்பாக அவர்களுடைய காலை பிடித்து விட்டு அவர்கள் சென்றவுடன் அகம்பாவமாகவும், முன்னே விட்டு பின்னே ஒன்று பேசுவதுமாகவும், சிங்காரம் நடந்து கொண்டது எங்களுக்கு மனதுக்கு சிரமமாக இருந்தது.

என்று முருகனைப் பற்றி சிங்காரம் அப்படி பேசிக் கொண்டிருந்தது எனக்கு கொஞ்சமும் பிடிக்கவில்லை அப்போதுதான் நான் முடிவு செய்தேன் இனி ஒரு நாளும் சிங்காரத்தின் கடைக்கு சாப்பிட வரக்கூடாது என்று. சிங்காரம் இந்த ஊருக்கு வந்ததிலிருந்து நானும் சிங்காரமும் நெருங்கின கூட்டாளிகள் சிங்காரம் வெறுங் கையோடு ஊரிலிருந்து வந்தது போது, எனது தந்தை சிங்காரத்தின் நிலையறிந்து ஆரம்பத்தில் எங்களுடைய வீட்டின், மேல் மாடியில் தங்கிக் கொள்வதற்கு அனுமதி கொடுத்தார் பிறகு தெரிந்தோ தெரியாமலோ சிங்காரத்தின் அனைத்து முன்னேற்றங்களிலும் , எனது தந்தை சிங்காரத்திற்கு மிகவும் உதவிகளைசெய்து வந்தார். சிங்காரம் எனக்கு நண்பன்தான் என்றாலும் கூட அவன் கடையில் ஒரு நாளும் காசு கொடுக்காமல் நான் சாப்பிட்டதே கிடையாது. சிங்காரம் முருகனிடம் நடந்து கொண்ட விதமும் இன்னும் பலரைப் பற்றி அவன் பேசுகிற அவதூறு வார்த்தைகளும் எனக்கு கொஞ்சமும் பிடிக்காத காரணத்தினால் அவன் கடைக்கு இனி வருவதில்லை என்று தீர்மானித்தேன். அதன்படியே பல நாட்கள் அவன் கடைக்கு நான் செல்லவில்லை. என் வீட்டில் இருந்து அவனுடைய வீடு சற்று தள்ளி இருந்ததால் அவனை நான் பார்ப்பதும் பேசுவதும் அவசியம் இல்லாமல் போய்விட்டது.

இப்போது சிங்காரம் மிகவும் உடல் நலம் குன்றி நோய் வாய் பட்டு மருத்துவமனையில் இருப்பதாக கேள்விப்பட்டேன். மனது கேட்காமல் மருத்துவமனைக்கு சென்று அவனைப் பார்த்தேன் பார்ப்பதற்கு மிகவும் சங்கடமாய் இருந்தது சிங்காரத்தின் வாயால் பேச முடியாதபடி வாய் மிகவும் கோணலாகி போயிருந்தது ஏதோ நரம்பு தளர்ச்சி தான் இதற்கு காரணம் என்று எல்லோரும் சொன்னார்கள். எனக்கு மட்டும் தான் தெரியும் அவன் ஏன் பேச முடியாமல் இந்த நிலைக்கு ஆளாகி விட்டான் என்றால், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசினால், பிற மனிதர்களை மனிதர்களாக நினைக்காமல் அவதூறு பேசினால், இந்த பிரபஞ்சம் அதற்கு உண்டான பரிசை கண்டிப்பாக கொடுக்கும் என்று நான் மட்டுமே அறிந்து வைத்திருந்தேன்.

**முத்தையா மோகன்.**
கோவை

# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



மேலாளர்: எங்க கம்பெனிக்கு ரொம்ப நேர்மையான ஆள் வேணும். நீங்க நேர்மையானவரா?

கேண்டிடேட்: ஆமா சார்! போன வாரம் கூட ஒரு இன்டர்வியூல "உங்களுக்குத் தகுதியே இல்லை"ன்னு சொன்னாங்க. அதை அப்படியே ஒத்துக்கிட்டு வெளிய வந்துட்டேன்!



# தினம் ஒரு சமையல்



## காய்கறி சாதம்

தேவையான பொருட்கள்:


அரிசி: 1 கப் (பார் BOIL அரிசி அல்லது பாசுமதி)
காய்கறிகள்: கேரட், பீன்ஸ், பட்டாணி, உருளைக்கிழங்கு (நறுக்கியது - 1 கப்)
தாளிக்க: பட்டை, லவங்கம், ஏலக்காய், பிரியாணி இலை.
காரத்திற்கு: பெரிய வெங்காயம் (1), தக்காளி (1), பச்சை மிளகாய் (2), இஞ்சி பூண்டு விழுது (1 ஸ்பூன்).
மசாலா: மஞ்சள் தூள் (சிறிது), மிளகாய் தூள் (1 ஸ்பூன்), கரம் மசாலா (1/2 ஸ்பூன்).
மற்றவை: புதினா, கொத்தமல்லி, எண்ணெய்/நெய், உப்பு.



செய்முறை:

தாளித்தல்: குக்கரில் எண்ணெய் மற்றும் நெய் ஊற்றி சூடானதும், பட்டை, லவங்கம், ஏலக்காய் சேர்த்து தாளிக்கவும். பின் நீளமாக நறுக்கிய வெங்காயம் மற்றும் பச்சை மிளகாய் சேர்த்து பொன்னிறமாகும் வரை வதக்கவும்.
வழுக்கல்: இஞ்சி பூண்டு விழுது சேர்த்து அதன் பச்சை வாசனை போனதும், தக்காளி மற்றும் புதினா இலைகளைச் சேர்த்து நன்கு வதக்கவும்.
காய்கறிகள்: நறுக்கி வைத்துள்ள காய்கறிகளைச் சேர்த்து 2 நிமிடம் வதக்கி, பின் மஞ்சள் தூள், மிளகாய் தூள், கரம் மசாலா மற்றும் தேவையான அளவு உப்பு சேர்க்கவும்.
அரிசி & தண்ணீர்: 1 கப் அரிசிக்கு 2 கப் தண்ணீர் (பாசுமதி அரிசி என்றால் 1.5 கப் தண்ணீர்) ஊற்றவும். தண்ணீர் கொதிக்க ஆரம்பித்ததும், ஊறவைத்த அரிசியைச் சேர்க்கவும்.
வேகவைத்தல்: குக்கரை மூடி 2 விசில் விட்டு இறக்கவும். பிரஷர் குறைந்ததும் மெதுவாகக் கிளறி, மேலே நறுக்கிய கொத்தமல்லித் தழையைத் தூவவும்.

# ஆனை நெருஞ்சில் பயன்கள்



நம் முன்னோர்கள் அனைவரும் உடல்நல குறைபாடு ஏற்பட்டால் ஆங்கில மருந்துகளை எடுத்து கொள்ளாமல் வீட்டில் உள்ள மூலிகை செடிகளை தான் பயன்படுத்தினார்கள். ஆனால் இன்றைய கால கட்டத்தில் உள்ளவர்களுக்கு மூலிகை செடிகளை பெயர்களே தெரிவதில்லை. இன்றைய காலத்தில் உள்ளவர்கள் மூலிகை செடியை பயன்படுத்தாமல் இருப்பதற்கு முக்கிய காரணமே அதில் உள்ள நன்மைகள் தெரியாமல் இருபதால் தான். அதனால் தான் இந்த பதிவில் யானை நெருஞ்சில் உள்ள நன்மைகள் பற்றி அறிந்து கொள்வோம்.

யானை நெருஞ்சில் இலையானது அகன்று நீண்ட வளைந்த விளிம்புகளை உடையது. தோராயமாக ஒன்றை அடி வளர கூடியது. இதன் தண்டு பகுதியானது தடிமனாகவும், எளிதில் உடைய கூடியதாகவும் இருக்கும். இத்தாவரமானது தமிழகத்தின் எல்லா பகுதிகளிலும் கிடைக்க கூடியதாக இருக்கின்றது.

யானை நெருஞ்சில் ஆண்டிஆக்சிடண்ட்டிகளால் நிறைந்து காணப்படுகிறது, இது கார்டியோ பாதுகாப்பு செயல்களுக்கு பொறுப்பானதாகும். இது இரத்த அழுத்தம் மற்றும் கொலஸ்டிரால் அளவை குறைக்க உதவுகிறது மேலும் இதனால் இந்த மூலிகை அதிரோஸ்கிளிரோஸ் மற்றும் பிற இதய பிரச்சனைகள் வராமல் தடுப்பதற்கு உதவுகிறது.

சிறுநீரக கல் பிரச்சனை இருந்தால் அவற்றை சரி செய்வதற்கு யானை நெருஞ்சில் பயன்படுத்தப்படுகிறது. சிறுநீரக கற்கள் மட்டுமில்லை, சிறுநீரக எரிச்சல், வலி, சிறுநீர் மஞ்சளாக வெளிப்படுவது போன்ற பிரச்சனைகளுக்கு மருந்தாக பயன்படுத்தப்படுகிறது. சில பேருக்கு கை, முழங்கால், மூட்டு போன்றவற்றில் வீக்கம் காணப்படும், இதனை குறைப்பதற்கு யானை நெருஞ்சில் உதவுகிறது. இத்தாவரத்தின் இலை மற்றும் வேர் பகுதியை எடுத்து தண்ணீரில் சுத்தம் செய்து 200 மிலி லிட்டர் தண்ணீரில் சேர்த்து கொதிக்க விடவும். இவை கொதித்து பாதியாக வரும் போது பானம் ரெடி. இதனை குடித்து வந்தால் உடல் உள்ள தேவையில்லாத நீர் இறங்கி வீக்கம் குறையும்.

# அஜித் - ஷாலினி காதல் மலர்ந்த காவியம் மீண்டும் ரீ-ரிலீஸ்.. திருமண நாளில் கிடைத்த ஜாக்பாட்!



1999ஆம் ஆண்டு வெளியான அமர்க்களம் திரைப்படம், அஜித் குமார் மற்றும் ஷாலினி இணைந்து நடித்த மிகப்பெரிய ஹிட் படங்களில் ஒன்றாகும். ஆக்ஷன், காதல் மற்றும் உணர்ச்சி கலந்த இந்த படம் அன்றைய காலகட்டத்தில் ரசிகர்களை வெகுவாக கவர்ந்தது. குறிப்பாக இந்த படத்தின் மூலம் அஜித்-ஷாலினி காதல் நிஜ வாழ்க்கையிலும் மலர்ந்து பின்னர் திருமணமாக மாறியது என்பது ரசிகர்களுக்கு இன்னும் இனிய நினைவாக உள்ளது. இந்நிலையில், 27 ஆண்டுகளுக்குப் பிறகு இன்று ஏப்ரல் 24ஆம் தேதி தமிழ்நாட்டில் இந்த படம் மீண்டும் திரையரங்குகளில் ரீரிலீஸ் செய்யப்பட்டிருக்கிறது. இது ரசிகர்களிடையே பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது. பரத்வாஜ் இசையமைத்த இந்த படத்தின் பாடல்கள் இன்றளவும் ரசிகர்களின் பிளேலிஸ்ட்களில் இடம்பிடித்து வருகின்றன.


மேலும், இன்று அஜித்-ஷாலினி தம்பதியின் திருமண நாள் என்பதால் இந்த ரீரிலீஸ் மேலும் சிறப்பாக மாறியுள்ளது. இதனை முன்னிட்டு ரசிகர்கள் திரையரங்குகளில் கூடி கொண்டாட்டமாக படம் பார்ப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

மொத்தத்தில், “அமர்க்களம்” ரீரிலீஸ் பழைய நினைவுகளை மீட்டெடுத்து, புதிய தலைமுறையினருக்கும் இந்த படத்தின் மகத்துவத்தை அறிமுகப்படுத்தும் ஒரு சிறந்த வாய்ப்பாக அமைந்துள்ளது.



ஸ்ரீத்தி ஷெட்டி பட விழாக்களுக்கு வரும்போது செம கிளாமர் ஆன லுக்கில் வந்து ரசிகர்களை கவர்ந்து வருகிறார்.

தற்போது அவர் சேலையிலில் அழகிய போஸ் கொடுத்து இருக்கும் லேட்டஸ்ட் ஸ்டில்களை பாருங்க.




# ‘வாழ 2’ டீமை நேரில் அழைத்து பாராட்டிய ராம் சரண் - தெலுங்கு ரசிகர்களுக்கு சர்ப்ரைஸ்!



மலையாள திரையுலகில் சவின் எஸ்.ஏ இயக்கத்தில் உருவாகியுள்ள வாழ 2 திரைப்படம், புதிய முகங்களான ஹாஷிர், ஆலன் பின் சிராஜ், அஜின் ஜாய், விநாயக் உள்ளிட்டவர்களின் நடிப்பில் கடந்த 2ஆம் தேதி வெளியாகி நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. 2024ஆம் ஆண்டு வெளியான ‘வாழ’ திரைப்படத்தின் தொடர்ச்சியாக வந்த இந்த இரண்டாம் பாகமும் ரசிகர்களிடையே எதிர்பார்ப்பை பூர்த்தி செய்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்த படத்தின் வெற்றி காரணமாக, ‘வாழ 3’ படத்திற்கான பணிகள் விரைவில் தொடங்கும் என இயக்குனர் அறிவித்திருப்பதும் ரசிகர்களுக்கு மேலும் உற்சாகத்தை அளித்துள்ளது. புதிய கதைக்களம் மற்றும் இளம் நடிகர்கள் இணைந்த இந்த தொடர்ச்சிப் படங்கள் மலையாள சினிமாவில் ஒரு புதிய அலை உருவாக்கி வருகின்றன.

இந்நிலையில், தெலுங்கு திரையுலகின் முன்னணி நடிகரான ராம் சரண், ‘வாழ 2’ படக்குழுவினரை நேரில் சந்தித்து பாராட்டுகளை தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது சமூக வலைதளமான எக்ஸ் (TWITTER) மூலம் பதிவிட்டுள்ளார். அதில், படக்குழுவினருடன் நேரில் கலந்துரையாடியது மகிழ்ச்சியான அனுபவமாக இருந்ததாகவும், இப்படம் மலையாளத்தில் மிகப்பெரிய வெற்றியை பெற்றுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.


மேலும், இந்த படத்தை தெலுங்கு ரசிகர்களிடம் கொண்டு செல்ல முயற்சி மேற்கொள்ளும் சஹுகாரபதி மற்றும் அர்ச்சனா ஆகியோரையும் அவர் பாராட்டியுள்ளார். இளம் படக்குழுவின் முயற்சிக்கு வாழ்த்து தெரிவித்த ராம் சரணின் இந்த பதிவு தற்போது வைரலாகி வருகிறது.

























## ATTENTION

**ரயில்வே மின்சார ஒப்பந்த பணிக்கு**

10th., ITI Electrical B- Licence, Dip EEE தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புக்கு:- 9094176404/ 7904974247.



PRGI No. TNBIL/25/A1569
பேப்பர்பாய்



# திருப்பதியில் குறைந்த பக்தர்களின் கூட்டம்

**திருப்பதி, ஏப்.25:**

தமிழகத்தில் நேற்று சட்டப்பேரவைத் தேர்தல் விறுவிறுப்பாக நடைபெற்றது. இதன் காரணமாக திருப்பதி ஏழுமலையான் கோயிலில் வழக்கத்தை விட சற்று குறைந்தே பக்தர்களின் கூட்டம் காணப்பட்டது.

நேற்று ஏழுமலையானை பக்தர்கள் 2 முதல் 3 மணி நேரத்துக்கு உள்ளாகவே தரிசனம் செய்து வெளியே வந்தனர்.

ஆனால், தமிழக தேர்தலையொட்டி மதுபான கடைகள் அடைக்கப்பட்டன.

இதனால் கடந்த 2 நாட்களாக தமிழக - ஆந்திர எல்லையில் உள்ள சித்தூர், திருப்பதி, காளஹஸ்தி, குப்பம், புத்தூர், நகரி, பிச்சாட்டூர், சத்யவேடு, பலமனேர், கார்வேட்டி நகரம் ஆகிய பகுதிகளில் தமிழகத்தில் இருந்து பைக்குகள், கார்களில் வந்து மது அருந்தியும், மதுபான பாட்டில்களை வாங்கியும் சென்றனர்.

இதனால் ஆந்திர எல்லைகளில் உள்ள மதுக்கடைகளில் 2 நாட்களாக கூட்டம் அலைமோதியது.

# நீதிமன்ற விசாரணை காணொலிகளை வெளியிட்ட விவகாரம்: கேஜரிவால் பதிலளிக்க உத்தரவு

**புதுடெல்லி, ஏப்.25:**

வழக்குரைஞர் வைபவ் சிங் தாக்கல் செய்த மனுவின் பேரில், நீதிபதிகள் வி. காமேஸ்வர ராவ் மற்றும் மன்மீத் பி.எஸ். அரோரா ஆகியோர் அடங்கிய அமர்வு அவர்களுக்கு நோட்டீஸ் அனுப்பியதுடன், உயர்நீதிமன்ற விதிகளின்படி நீதிமன்ற நடவடிக்கைகளை அனுமதியின்றிப் பதிவு செய்வதும் பகிர்வதும் தடைசெய்யப்பட்டுள்ளதால், ஏப்ரல் 13 விசாரணையின் காணொளிகளை சமூக ஊடகத் தளங்களில் இருந்து நீக்குமாறும் உத்தரவிட்டது.

மெட்டா பிளாட்ஃபார்ம்ஸ் மற்றும் கூகுள் நிறுவனத்தின் வழக்குரைஞர், மனுதாரர் தனது மனுவில் சுட்டிக்காட்டிய ஆட்சேபனைக்குரிய இணைப்புகள் நீக்கப்பட்டு விட்டதாகக் கூறினார். ஏப்ரல் 13 விசாரணை களைக் காட்டுவதாகக் கூறப்படும் சில காணொளிகள் தளத்தில் கிடைப்பதைக் குறிப்பிட்ட நீதிமன்றம், நோட்டீஸ் கிடைத்தவுடன் அந்த இணைப்புகளை உடனடியாக நீக்க வேண்டும் என்று உத்தரவிட்டது. மேலும், 'கேஜரிவால் உள்ளிட்ட எதிர்மனுதாரர்களுக்கு நாங்கள் நோட்டீஸ் அனுப்புகிறோம். பிரமாணப் பத்திரம் நான்கு வாரங்களுக்குள் தாக்கல் செய்யப்பட வேண்டும்' என்று நீதிமன்றம் கூறியது. மற்ற எதிர்மனுதாரர்களில் ஆம் ஆத்மிகட்சித்தலைவர்களான சஞ்சீவ் ஜா, முகேஷ் அஹ்லாவத், ஜர்னைல் சிங் மற்றும் பத்திரிகையாளர் ரவிஷ் குமார் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இந்த வழக்கை ஜூலை 6 ஆம் தேதி விசாரணைக்குப் பட்டியலிட்ட நீதிமன்றம், மத்திய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்திற்கும் நோட்டீஸ் அனுப்பி இந்த வழக்கில் ஆஜராகுமாறு கோரியது. 'காங்கிரஸ் தலைவர் திக்விஜய் சிங்கும், பல ஆம் ஆத்மிகட்சித்தலைவர்களும், பல்வேறு எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களும், ஏப்ரல் 13 அன்று நீதிபதி சர்மா முன்னிலையில் கேஜரிவால் ஆஜரான காணொளிகளை, பொதுமக்களின் பார்வையில் நீதிமன்றத்தின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் நோக்கத்துடன், சமூக ஊடகங்களில் வேண்டுமென்றே மற்றும் திட்டமிட்டுப் பதிவுசெய்து பரப்பினர்' என்று மனுவில் கூறப்பட்டுள்ளது. 13.04.2026 தேதியிட்ட நீதிமன்ற நடவடிக்கைகளை பதிவேற்றி பகிரங்கப்படுத்திய அனைத்து எதிர்மனுதாரர்கள் மீதும் நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கைகள் தொடங்கப்பட வேண்டும் என்றும் சமூக பொதுநல மனு கோரியது.

# பொருளாதார சீர்திருத்தம் மேற்கொள்ளாவிட்டால் பின்னடைவு: மோடிக்கு பெர்ன்ஸ்டீன் நிறுவனம் எச்சரிக்கை

**புதுடெல்லி, ஏப்.25:**




பிரதமர் நரேந்திர மோடிக்கு அந்த நிறுவனம் அனுப்பியுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது: கடந்த 6 ஆண்டுகளில் கொள்கை முடிவுகள் சரியான திசையில் இருந்ததால், பொருளாதார நிலைத்தன்மை மற்றும் ஜிடிபி தரவரிசையில் இந்தியா முன்னேற்றம் கண்டுள்ளது. எனினும், இந்த அண்மைக்கால வெற்றிகளைக் கண்டு நாம் மனநிறைவு அடைந்து விடக் கூடாது. உலகளாவிய விநியோகச் சங்கிலி மாற்றமடைந்து வரும் வேளையில், இந்தியா தனது சீர்திருத்தங்களை வேகப்படுத்துவது அவசியம். இல்லாவிட்டால் இதுவரை ஈட்டிய பலன்களை இந்தியா இழக்க நேரிடும்.

இந்தியாவின் நடுத்தர வர்க்கத்தை உயர்த்திய சேவைத் துறைக்கு, தற்போது செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தொழில்நுட்பம் பெரும் சவாலாக உருவெடுத்துள்ளது. தானியங்கி முறையினால் நடுத்தர வர்க்க வேலைவாய்ப்புகள் பறிபோகும் அபாயம் உள்ளது. இந்தியா இத்தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துபவராக மட்டுமே இல்லாமல், அதை உருவாக்குபவராகவும் மாற வேண்டும். நாட்டின் 45 சதவீத உழைப்பாளர்கள், விவசாயத் துறையில் ஈடுபட்டுள்ள போதிலும், ஜிடிபி-க்கு அவர்களின் பங்களிப்பு வெறும் 15 சதவீதமாக மட்டுமே உள்ளது. எனவே, விவசாயச் சட்டங்கள் திரும்பப் பெறப்பட்டாலும், இத்துறையில் சீர்திருத்தங்கள் இன்றி வளர்ச்சியை எட்ட முடியாது. வெறும் கடன் தள்ளுபடிகளும், மானியங்களும் நிரந்தரத் தீர்வாகாது.


அதேபோல், பெட்ரோலியத் தேவையில் 88 சதவீதத்தை இறக்குமதியை மட்டுமே நம்பியிருப்பது பலவீனமானது. மின்சார வாகனத் தொழில்நுட்பத்துக்கு விரைவாக மாறாவிட்டால், மீண்டும் வெளிநாட்டுத் தொழில்நுட்பங்களைச் சார்ந்திருக்கும் நிலை இந்தியாவுக்கு ஏற்படும்.

பல்வேறு மாநில அரசுகள் அறிவிக்கும் நேரடிப் பணப் பரிமாற்றத் திட்டங்களுக்காக ஆண்டுக்கு ரூ.1.7 லட்சம் கோடி முதல் ரூ. 2.5 லட்சம் கோடி வரை செலவிடப்படுகிறது. இது போன்ற செலவினங்கள் உள்கட்டமைப்பு முதலீடுகளைக் குறைத்து, பணவீக்கத்தை அதிகரிக்கும் அபாயம் உள்ளது. வளர்ந்து வரும் ஒரு நாட்டின் பொருளாதாரத்துக்கு இது நல்லதல்ல.

ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறைக்கான இந்தியாவின் முதலீடு ஜிடிபி-யில் 0.6 சதவீதமாக மட்டுமே உள்ளது. இது உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைவு. இந்தியாவிடம் மூலதனம், திறமை, ஆர்வம் ஆகியவற்றுக்குக் குறைவில்லை. ஆனால் கடினமான முடிவுகளை உடனுக்குடன் எடுக்கும் துணிச்சலே இப்போதைய தேவை. இவ்வாறு அந்த கடிதத்தில் பெர்ன்ஸ்டீன் நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

# இந்தியர்கள் பிரான்ஸ் செல்ல இனி விசா தேவையில்லை

**புதுடெல்லி, ஏப்.25:**



இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் கூறியதாவது:-

ஐரோப்பிய பிராந்தியமான பிரான்ஸ் வழியாகப் பயணிக்கும் இந்தியர்களுக்கான விசா இல்லாத பயணத்தை பிரெஞ்சு அரசாங்கம் இப்போது செயல்படுத்தியுள்ளது.

இந்த முடிவு, இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதில் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அதிபர் இம்மானுவேல் மக்ரோன் ஆகியோரின் ஆழ்ந்த அர்ப்பணிப்பைக் காட்டுகிறது.

இந்த அறிவிப்பை நாங்கள் வரவேற்கிறோம். உங்களுக்கு நினைவிருக்கலாம். இந்த ஆண்டு பிப்ரவரியில் மும்பையில் நடந்த சந்திப்பின் போது பிரதமர் மற்றும் அதிபர் மக்ரோன் இடையே இந்திய கடவுச்சீட்டு வைத்திருப்பவர்களுக்கான போக்குவரத்து விசா தேவையை நீக்குவது குறித்து ஒப்புக்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

# தங்க கடத்தல் வழக்கில் நடிகை ரன்யா ராவுக்கு ஜாமீன்


**பெங்களூரு, ஏப்.25:**

கர்நாடக போலீஸ் டிஜிபி ராமசந்திர ராவின் வளர்ப்பு மகளும், நடிகையுமான ரன்யா ராவ் (32) துபாயில் இருந்து 14.8 கிலோ தங்கம் கடத்தி வந்ததாக கடந்த ஆண்டு மார்ச்சில் பெங்களூருவில் கைது செய்யப்பட்டார். அவரது வீட்டில் நடத்திய சோதனையில் ரூ.2.8 கோடி தங்கம், ரூ.2.4 கோடி ரொக்கம் சிக்கியது.

வருவாய் புலனாய்வு இயக்குநரக அதிகாரிகள் அவர் மீது தங்கக் கடத்தல், அந்நிய செலாவணி மோசடி உட்பட 5 பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்தனர். காபி போசா வழக்கில் அவருக்கு ஓராண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டது. அந்த தண்டனை காலம் நேற்று முன்தினத்துடன் நிறைவடைந்தது. தங்கக் கடத்தல் வழக்கில் தனக்கு ஜாமீன் மறுக்கப்பட்டதை எதிர்த்து ரன்யா ராவ் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். அவரது ஜாமீன் மனுவை விசாரித்த நீதிபதி விஸ்வ நாத் கவுடர், ரன்யா சிறையில் அடைக்கப்பட்டு ஓராண்டு நிறைவடைந்த நிலையில் நேற்று நிபந்தனை ஜாமீன் வழங்கி உத்தரவிட்டார். நீதிமன்ற உத்தரவு அதிகாரிகளிடம் வழங்கப்பட்டதை அடுத்து சிறையில் இருந்து ரன்யா ராவ் வெளியே வந்தார்.

# இந்து கடவுள்களை அவமதிப்பதா? - பிரகாஷ்ராஜ் மீது ரூ.100 கோடிக்கு மான நஷ்டஈடு வழக்கு

**திருப்பதி, ஏப்.25:**



இந்து கடவுள்களை அவமானப்படுத்தி யார் பேசினாலும் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்போம் என திருமலை திருப்பதி தேவஸ்தான அறங்காவலர் குழு உறுப்பினர் பானு பிரகாஷ் ரெட்டி எச்சரித்துள்ளார். இவர் நடிகர் பிரகாஷ்ராஜ் மீதும் ரூ.100 கோடிக்கு மான நஷ்ட ஈடு வழக்கை தொடர்ந்துள்ளார்.

அறங்காவலர் குழு உறுப்பினரும், பாஜகவின் ஆந்திர மாநில செய்தித் தொடர்பாளருமான பானு பிரகாஷ் ரெட்டி, சமீபத்தில் ராமர், லட்சுமணர் பற்றி கேலியாக பேசிய நடிகர் பிரகாஷ்ராஜ் மீது ரூ. 100 கோடிக்கு மான நஷ்ட ஈடு வழக்கை தொடர்ந்துள்ளார். இது தொடர்பாக அவர் நடிகர் பிரகாஷ்ராஜ் மீது வழக்கு பதிவு செய்ய வேண்டுமென ஆந்திர டிஜிபியிடம் புகார் அளித்துள்ளார்.

இது தொடர்பாக பானு பிரகாஷ் ரெட்டி கூறியதாவது: இந்து கடவுள்கள், இந்து கலாச்சாரங்களை கொச்சைபடுத்தும் வகையில் சமூக வலைதளத்தில் பேசுவது பலருக்கு வாடிக்கையாகி விட்டது. அப்படி பேசுபவர்களின் பேச்சை இனி கேட்டுக்கொண்டு இருக்க முடியாது. சமீபத்தில் இந்து கடவுள்களை இழிவாகவும், கேலியும், கிண்டலுமாக பேசிய நடிகர் பிரகாஷ்ராஜ் மீதும் ரூ.100 கோடிக்கு மான நஷ்ட ஈடு வழக்கு தொடரப்பட்டுள்ளது.

சிலர் இதையே பிழைப்பாக வைத்துக்கொண்டு சமூக வலைதளங்கள் மூலம் பேசுகின்றனர். சனாதன தர்மத்தை யார் தரக்குறைவாக பேசினாலும் நாங்கள் வேடிக்கை பார்த்து கொண்டு இருக்க மாட்டோம். கோயில்கள் என்பது மதசார்பற்ற இடம் கிடையாது. அது இந்துக்களுக்கு மட்டுமானது. இனி கோயில்களில் இந்துக்கள் மட்டுமே பணியாற்ற வேண்டும். வியாபாரங்களும் இந்துக்கள் மட்டுமே செய்ய வேண்டும்.

ஸ்ரீசைலம் மல்லிகார்ஜுனர் கோயிலிலும் வேற்று மதத்தினர் பலர் பணியாற்றுகின்றனர் எனும் தகவல்கள் வருகின்றன. இது குறித்தும் ஆந்திராவில் கூட்டணி அரசு ஆலோசித்து முடிவெடுக்கும். ஆந்திராவில் இந்து கோயில்கள் மீது தாக்குதல் நடத்தினால் சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மத்தியில் உள்ள பாஜகவின் ஆட்சியால் நாட்டில் இந்து கோயில்கள், கலாச்சாரத்திற்கு பாதுகாப்பு உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# இந்திய வான்வெளியில் பறப்பதற்கு பாகிஸ்தான் விமானங்களுக்கு மே 24 வரை தடை நீட்டிப்பு

**புதுடெல்லி, ஏப்.25:**

இந்திய வான்வெளியில் பாகிஸ்தான் விமானங்கள் பறப்பதற்கு விதிக்கப்பட்ட தடையை மே 24-ம் தேதி வரை மத்திய அரசு நீட்டித்துள்ளது.

ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் கடந்த ஆண்டு ஏப்ரல் 22-ம் தேதி பாகிஸ்தான் தீவிரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் 26 பேர் உயிரிழந்தனர். இதையடுத்து ஏப்ரல் 30-ம் தேதி, இந்திய வான்வெளியில் பாகிஸ்தான் விமானங்கள் பறப்பதற்கு மத்திய அரசு தடை விதித்தது. ஆனால் இந்தியாவுக்கு முன்னதாகவே, மே 24 முதல் இத்தகைய தடையை பாகிஸ்தான் விதித்தது. பாகிஸ்தான் வான்வெளியில் இந்திய விமானங்கள் பறக்க தடை விதிக்கப்பட்டது. இரு நாடுகளும் தங்கள் வான்வெளியை மற்ற நாட்டின் விமானங்களுக்கு மூடுவதற்கான தடையை கடந்த ஆண்டு ஏப்ரல் முதல் மாறி மாறி நீட்டித்து வருகின்றன. பாகிஸ்தான் தனது வான்வெளி தடையை கடந்த செவ்வாய்க்கிழமை மே 24 வரை நீட்டித்தது.


இந்நிலையில் மத்திய அரசு புதன்கிழமை வெளியிட்ட விமானிகளுக்கான அறிவிப்பு (NOTAM) ஒன்றில் ”பாகிஸ்தான் விமானங்கள் (ராணுவ விமானங்கள் உட்பட) இந்திய வான்வெளியை பயன்படுத்த இயலாது. இந்த தடை மே 23ம் தேதி 23:59 மணி (UTC) வரை அமலில் இருக்கும்.

இந்திய நேரப்படி (IST) மே 24ம் தேதி காலை 05:30 மணி வரை அமலில் இருக்கும்” என்று கூறப்பட்டுள்ளது. இரு நாடுகளின் இந்த நடவடிக்கை ஓராண்டாக நீடித்து வருவது குறிப்பிடத்தக்கது.

பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடியாக பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் செயல்பட்டு வந்த 9 தீவிரவாத முகாம்களை ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை மூலம் இந்தியா தாக்கி அழித்தது. மேலும் சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை இந்தியா ரத்து செய்தது.

# பல வாகனங்கள் மோதி விபத்து உ.பி.–யில் 11 பேர் உயிரிழப்பு

**மிர்சாபூர், ஏப்.25:**



உ.பி.யின் மிர்சாபூர் மாவட்டம், திராமண்ட் கஞ்ச் பள்ளத்தாக்கில் இருந்து லசோடா நோக்கி இறங்கும் தேசிய நெடுஞ்சாலையில் புதன்கிழமை இரவு பல வாகனங்கள் அடுத்தடுத்து மோதி விபத்து நிகழ்ந்தது. இந்த கோர விபத்தில் குழந்தைகள் உட்பட 11 பேர் உயிரிழந்தனர்.

இது மிகவும் துயரமான மற்றும் நெஞ்சை உலுக்கும் விபத்து என்று உ.பி. முதல்வர் யோகி ஆதித்யநாத் கூறியுள்ளார். இந்த விபத்து குறித்து பிரதமர் மோடி 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "மிர்சாபூர் விபத்தில் ஏற்பட்ட உயிரிழப்புகளால் நான் மிகுந்த வேதனை அடைந்துள்ளேன். துயருற்ற குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கல்கள்" என்று கூறியுள்ளார். மேலும் இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.2 லட்சம், காயம் அடைந்தவர்களுக்கு தலா ரூ.50 ஆயிரம் நிவாரண நிதி வழங்கப்படும் என அறிவித்துள்ளார்.

# இந்தியா - நியூஸிலாந்து இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம்!



**புதுடெல்லி, ஏப்.25:**

இந்தியா - நியூஸிலாந்து இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் ஏப். 27-ல் கையெழுத்தாகவுள்ளதாக நியூஸி. பிரதமர் கிறிஸ்டோபர் லக்ஸன் அறிவித்துள்ளார்.

இந்தியா - நியூஸிலாந்து இடையே தடையற்ற வர்த்தகம் ஒப்பந்தம் மேற்கொள்ள 2025 மார்ச் மாதத்தில் பேச்சுவார்த்தை தொடங்கப்பட்டு, 2025 டிசம்பரில் பேச்சுவார்த்தை நிறைவடைந்தது.

இந்த நிலையில், இரு நாடுகளும் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் திங்கள்கிழமையில் (ஏப். 27) கையெழுத்திடவுள்ளதாக அறிவித்துள்ளார். நியூஸிலாந்தில் இந்தியப் பொருள்களுக்கு கட்டணமில்லா சலுகையை மேற்கொள்ளுவதே இந்த ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கமாகும். மேலும், இந்த ஒப்பந்தத்தின் மூலம் அடுத்த 15 ஆண்டுகளில் 20 பில்லியன் டாலர் முதலீட்டைக் கொண்டுவரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவில் விவசாயத் துறை மற்றும் உள்நாட்டுத் தொழிற்துறையின் நலன்களைக் கருத்தில்கொண்டு, நியூஸிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் பால், க்ரீம், தயிர், சீஸ் போன்ற பால் பொருள்கள், வெங்காயம், சர்க்கரை, மசாலா பொருள்கள், சமையல் எண்ணெய், ரப்பர் ஆகியவற்றுக்கு இந்தியா வரிச் சலுகை அளிக்கவில்லை.

ஆனால், நியூஸிலாந்திலிருந்து ஆட்டிறைச்சி, கம்பளி, நிலக்கரி, மரப் பொருள்கள் முதலியவை வரிச் சலுகை பெறும். இந்த ஒப்பந்தத்தின்கீழ், தகவல் தொழில்நுட்பம், பொறியியல், சுகாதாரம், கல்வி, கட்டுமானம் போன்ற துறைகளைச் சேர்ந்த 5,000 இந்தியத் தொழில் வல்லுநர்களுக்கு தற்காலிக வேலைவாய்ப்பு நுழைவு விசா வழங்கப்படும்.

# மருத்துவம் மக்களின் நம்பிக்கை: குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன்

**புதுடெல்லி, ஏப்.25:**

தேசத்தைக் கட்டமைப்பதில் மருத்துவர்களுக்கும் முக்கியப் பங்கு உள்ளது. மருத்துவச் சேவையை மக்களின் நம்பிக்கையாககருதி செயல்பட வேண்டும்' என்று குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் வலியுறுத்தினார்.

உத்தரகண்ட் மாநிலம் ரிஷிகேஷில் உள்ள எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரியில் வியாழக்கிழமை நடைபெற்ற 6-ஆவது பட்டமளிப்பு விழாவில் பங்கேற்று மாணவ, மாணவிகளுக்கு பட்டச்சான்றிதழ்களை வழங்கிய குடியரசு துணைத் தலைவர் ராதாகிருஷ்ணன், பின்னர் பேசியதாவது:

மருத்துவப் பட்ட தாரிகள் தங்களின் தொழில்சார் கடமைகளை அர்ப்பணிப்புடனும், குறிக்கோள் உணர்வுடனும் பணியாற்ற வேண்டும். கரோனா பாதிப்பு காலத்தில், மீள்திறனையும், புதிய கண்டுபிடிப்பு மற்றும் கடமை உணர்வையும் இந்தியா வெளிப்படுத்தியது. அனைவருக்கும் சமமான மருத்துவச் சேவை கிடைப்பதை உறுதிப்படுத்தும் வகையில், 140 கோடி மக்களுக்கும் கட்டணமின்றி கரோனா தடுப்பூசி போடப்பட்டது. லாப நோக்கு கருதாமல், மனித நலனுக்காக தடுப்பூசிகளை இந்திய விஞ்ஞானிகள் உருவாக்கினர். நூறுக்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கரோனா தடுப்பூசிகளை இந்தியா வழங்கி, கருணைமிக்க உலகளாவிய கூட்டாளி என்பதை உறுதிப்படுத்தியது.

கடந்த 10 ஆண்டுகளில் புதிய எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் தொடங்கப்பட்டதன் மூலம், பின்தங்கிய பகுதிகளிலும் தரமான மருத்துவச் சேவை கிடைப்பது வலுப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த வகையில், மருத்துவச் சேவை என்பதை மருத்துவமனை வளாகத்தைத் தாண்டி பின்தங்கிய கிராமப்புற மக்களையும் சென்றடைய வேண்டும்.

தேசத்தைக்கட்டமைப்பதில் மருத்துவர்களுக்கும் முக்கியப் பங்கு உள்ளது. மருத்துவச் சேவையை மக்களின் நம்பிக்கையாக கருதி செயல்பட வேண்டும். நோய்த் தடுப்பு சிகிச்சை, கிராமப்புற மருத்துவச்சேவை, ஆராய்ச்சி, புதிய கண்டுபிடிப்புகள் மூலம் மட்டுமின்றி பரிவுணர்வு மற்றும் நேர்மையான வழிகளில் மருத்துவர்கள் தங்களின் பங்களிப்பை ஆற்ற வேண்டும் என்றார்.




# 18 ஆண்டு விசாரணைக்குப் பிறகு போதைப் பொருள் வழக்கில் உ.பி. நபருக்கு 10 ஆண்டு சிறை

**லக்னோ, ஏப்.25:** உ.பி.யில் போதைப் பொருள் வைத்திருந்த ஒருவருக்கு 18 ஆண்டு கால விசாரணைக்குப் பிறகு ஜான்சி நீதிமன்றம் 10 ஆண்டுகள் சிறை மற்றும் ரூ.1 லட்சம் அபராதம் விதித்துள்ளது.

இது குறித்து ஜான்சி மாவட்ட உதவி அரசு வழக்கறிஞர் தீபக் திவாரி கூறுகையில், "உத்தர பிரதேச மாநிலம் கான்பூர் மாவட்டம் கல்யாண் பூரை சேர்ந்தவர் சஞ்சய் சிங். இவர் தற்போது மகாவீரன் பகுதியில் வசித்து வருகிறார். இவர் கடந்த 2008ம் ஆண்டு ஏப்ரல் 2ம் தேதி பிரேம்நகர் போலீஸார் நடத்திய சோதனையில் கைது செய்யப்பட்டார். சஞ்சய் சிங்கிடம் இருந்து 300 கிராம் போதைப் பொருளை கைது செய்த போலீஸார் அவர் மீது வழக்குப் பதிவு செய்து சிறையில் அடைத்தனர்" என்று தெரிவித்தார்.

சஞ்சய் சிங் மீது சங்கிலி பறிப்பு, கொள்ளை உள்ளிட்ட பல்வேறு குற்ற வழக்குகள் பல்வேறு காவல் நிலையங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்நிலையில் போதைப் பொருள் வழக்கில் ஜான்சி கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி சரத் சவுத்ரி புதன்கிழமை அளித்த தீர்ப்பில், சஞ்சய் சிங் குற்றவாளி என உறுதி செய்தார். அவருக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், ரூ.1 லட்சம் அபராதமும் விதித்து உத்தரவிட்டார்.

# வேதை மீனவர்கள் விரட்டியடிப்பு: இலங்கை கடற்படை அட்டூழியம்

**வேதாரண்யம், ஏப்.25:** நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் அடுத்த வாணவன் மகாதேவியை சேர்ந்தவர் குமார் (36). மீனவரான இவர், தனக்கு சொந்தமான பைபர் படகில் அதே பகுதியை சேர்ந்த கதிர்வேல் (54), முருகபாண்டி(51), ராஜ்(50) ஆகியோருடன் நேற்றுமுன்தினம் காலை மீன்பிடிக்க சென்றார். கோடியக்கரைக்கு தென்கிழக்கு 10கடல் மைல் தொலைவில் நடுக்கடலில் நேற்று அதிகாலை மீன் பிடித்து கொண்டிருந்தனர். அப்போது அந்த வழியாக ரோந்து வந்த இலங்கை கடற்படையினர், பைபர் படகை சுற்றி வளைத்து மீனவர்களை கடுமையாக தாக்கினர். மேலும் படகில் இருந்த ஒரு லட்சம் மதிப்பிலான வலைகளை அறுத்து சேதப்படுத்தியதோடு 4மீனவர்களை மிரட்டியதோடு, அவர்களை அங்கிருந்து விரட்டி அடித்தனர்.

இலங்கை கடற்படையினர் தாக்கியதில் காயமடைந்த 4 பேரும் வானவன் மகாதேவி கடற்கரைக்கு வந்தனர். பின்னர் அவர்கள் நாகப்பட்டினம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட மீனவர்களை வேதாரண்யம் திமுக வேட்பாளர் புகழேந்தி, அதிமுக வேட்பாளர் முன்னாள் அமைச்சர் ஓஎஸ்.மணியன் ஆகியோர் நேரில் சென்று ஆறுதல் கூறினர். இதுகுறித்து கடலோர காவல் குழும போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வித்தியாசமாக 'புரொபோசல்' செய்வதாக கூறி காதலனை கட்டிபோட்டு எரித்து கொன்ற காதலி

**திருமணம் செய்வதாக கூறி ஏமாற்றியதால் அதிர்ச்சி**



**பெங்களூரு, ஏப்.25:** கர்நாடக மாநிலம் பெங்களூருவில் உள்ள டெலிகாம் ஸ்டோர் ஒன்றில் பிரேர்ணா (27) மற்றும் கிரண் (27) ஆகியோர் ஒன்றாக வேலை செய்து வந்தனர். கடந்த ஓராண்டிற்கும் மேலாக இருவரும் காதலித்து வந்த நிலையில், சமீபகாலமாக கிரண் தன்னைத் தவிர்ப்பதாக காதலி பிரேர்ணா கருதி வந்தார். மேலும் கிரண் தன்னைத் திருமணம் செய்து கொள்ள மாட்டாரோ என்ற அச்சமும் அவருக்கு இருந்துள்ளது. இதனால் ஆத்திரமடைந்த பிரேர்ணா, கிரணைத் தீர்த்துக் கட்டத் திட்டமிட்டார். இவர்களிடையே அவ்வப்போது கருத்து வேறுபாடுகள் காரணமாகப் பல பிரச்னைகள் ஏற்பட்டு வந்தன.

இந்நிலையில், தெற்கு பெங்களூருவின் அஞ்சனாபுராவில் உள்ள தனது வீட்டிற்கு நேற்று கிரணை பிரேர்ணா வரவழைத்தார். வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில், கிரணிடம் 'வித்தியாசமான முறையில் உனக்குத் திருமண புரொபோசல் செய்யப் போகிறேன்' என்று கூறி, அவரது கண்களைத் துணியால் கட்டி நாற்காலியில் அமர வைத்தார். பின்னர் அவரது கை, கால்களைக் கயிற்றால் கட்டிப்போட்ட பிரேர்ணா, முன்கூட்டியே தயார் செய்து வைத்திருந்த எரியும் திரவத்தை கிரண் மீது ஊற்றித் தீ வைத்தார். இதனைத் தனது செல்போனில் வீடியோ எடுத்தபடியே அவர் துடிதுடித்து இறப்பதைப் பார்த்தார். பின்னர் அங்கிருந்து தப்பிவிட்டார். தகவலறிந்த போலீசார் தீயில் கருகிய கிரணின் சடலத்தை கைப்பற்றி விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதுகுறித்து துணை கமிஷனர் டி.எல். நாகேஷ் கூறுகையில், 'பெண்ணைக் கைது செய்து விசாரணை நடத்தியதில், காதலன் கிரண் தன்னைத் தவிர்த்ததால் ஆத்திரத்தில் தீ வைத்துக் கொன்றதை ஒப்புக்கொண்டார்' என்று தெரிவித்தார்.

# பானை சின்னத்திற்கு வாக்களித்து வீடியோ வெளியிட்ட திமுக நிர்வாகி கைது

**கடலூர், ஏப்.25:** தமிழக சட்டசபை தேர்தலில் நேற்று வாக்குப்பதிவு நடைபெற்றது. வாக்குச்சாவடி மையத்திற்குள் செல்போன் எடுத்துச்செல்லக்கூடாது. வாக்களிப்பதை செல்போனில் புகைப்படம் அல்லது வீடியோ எடுக்ககூடாது என்றும், இதை மீறினால் கைது நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஏற்கனவே தேர்தல் ஆணையம் தரப்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டு இருந்தது.

இந்த நிலையில், கடலூர் மாவட்டம் பண்ருட்டி நகர திமுக இளைஞரணி துணை அமைப்பாளராக உள்ள எம்.ஜி.ஆர்.விக்கி என்ற விக்னேஸ்வரன் (வயது 33) என்வர், களத்துமேடு நகராட்சி தொடக்கப்பள்ளியில் உள்ள வாக்குச்சாவடி மையத்தில் காலை 10 மணிக்கு தனது வாக்கை செலுத்தினார்.

அப்போது, தொகுதியில் தி.மு.க. கூட்டணியில் உள்ள விடுதலை சிறுத்தைகள் கட்சியின் வேட்பாளரின் பானை சின்னத்திற்கு அவர் வாக்களித்து, அதை தனது செல்போனில் வீடியோவாக பதிவு செய்துள்ளார். இந்த வீடியோவை முகநூல் பக்கத்தில் வெளியிட்டார். இதை தொடர்ந்து வீடியோ வைரலானது.

இதுபற்றி அறிந்த பண்ருட்டி சட்டமன்ற தொகுதி தேர்தல் அலுவலர் கமலம் பண்ருட்டி போலீசில் புகார் செய்தார். அதன்பேரில் போலீஸ் இன்ஸ்பெக்டர் பாஸ்கரன் தேர்தல் நடத்தை விதிமுறைகளை மீறி ஓட்டுப் பதிவை வீடியோ எடுத்த விக்னேஸ்வரன் மீது வழக்கு பதிவு செய்து அவரை அதிரடியாக கைது செய்தார். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# அண்ணா பல்கலைக்கழகத்தில் வாக்கு எண்ணும் மையத்தில் தீவிர பாதுகாப்பு



**சென்னை, ஏப்.25:** சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் 5 தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கை மே 4ல் நடைபெற உள்ளது. மயிலாப்பூர், சைதாப்பேட்டை, தியாகராய நகர், வேளச்சேரி மற்றும் விருகம்பாக்கம் உள்ளிட்ட 5 தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கை மையமாக சென்னை அண்ணா பல்கலைக்கழகம் உள்ளது.

காலை முதல் வளாகத்தில் 450 போலீசார் சுழற்சி முறையில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

துணை ராணுவத்தினர், தமிழ்நாடு சிறப்பு காவல் படையினர், ஆயுத படையினர் மற்றும் சட்ட ஒழுங்கு போலீசார் என நான்கு வகையான போலீஸ் பாதுகாப்பு சுழற்சி முறையில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். இந்த வளாகம் முழுவதும் 210 சிசிடிவி கேமராக்களால் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மேலும், வேட்பாளர்களின் முகவர்களும் நிலைய கட்டுப்பாட்டு அறையில் கண்காணிப்பு கேமராக்களை பார்வையிட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இது மட்டுமின்றி காவல் துறை உயர் அதிகாரிகளும் இந்த வாக்கு எண்ணிக்கை மையத்தை பார்வையிட்டு வருகிறார்கள்.

# சென்னை புறநகர் வழித்தடத்தில் 2வது ஏசி மின்சார ரயில் சேவை: விரைவில் பயன்பாட்டுக்கு வருகிறது




**சென்னை, ஏப்.25:** சென்னையில் 2வது ஏசி மின்சார ரயில் சேவையை விரைவில் தொடங்க ரயில்வே நிர்வாகம் திட்டமிட்டுள்ளது. இந்த ரயிலை சென்ட்ரல் - அரக்கோணம் மார்க்கத்தில் இயக்குவது தொடர்பாகவும் ஆலோசிக்கப் படுகிறது. சென்னை ஐசிஎப் ஆலையில் தயாரிக்கப்பட்ட 12 பெட்டிகள் கொண்ட முதல் ஏசி மின்சார ரயில் கடந்த ஆண்டு ஏப்ரல் 19ம் தேதி, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கப்பட்டது. இந்த ரயில் சென்னை கடற்கரை - செங்கல்பட்டு மார்க்கத்தில் இயக்கப்படுகிறது. இந்த ரயிலுக்கு பயணிகள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்து வருகிறது. இதற்கிடையில், சென்னை சென்ட்ரல் - அரக்கோணம், கடற்கரை - செங்கல்பட்டு ஆகிய இரு மார்க்கங்களில் 'பீக் ஹவர்சில்' கூடுதல் ஏசி மின்சார ரயில்கள் இயக்க பயணிகள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

அதன்பேரில், கூடுதல் மின்சார ரயில் இயக்க ரயில்வே வாரியத்துக்கு தெற்கு ரயில்வே பரிந்துரை செய்திருந்தது. ரயில்வே வாரியமும் தெற்கு ரயில்வேயின் சென்னை கோட்டத்துக்கு ஏசி மின்சார ரயில் தயாரித்து வழங்க, ஐ.சி.எப் நிர்வாகத்திடன் கேட்டிருந்தது. இதையடுத்து, 2வது ஏசி மின்சார ரயில் தயாரிப்பு பணி சென்னை ஐசிஎப் ஆலையில் கடந்த ஆண்டு தொடங்கி நடைபெற்று வந்தது. இப்பணி 2 மாதம் முன்பு நிறைவடைந்தது. இதையடுத்து, இந்த ஏசி மின்சார ரயிலை தெற்கு ரயில்வேயின் சென்னை ரயில்வே கோட்டத்துக்கு ஒரு மாதத்துக்கு முன்பு அனுப்பி வைக்கப்பட்டது. இந்த ரயில், தற்போது அண்ணனூர் ரயில்வே யார்டில் நிறுத்தி, பல்வேறு சோதனைகளுக்கு உட்படுத்தப்படுகிறது. இந்த ரயில் சென்ட்ரல் - அரக்கோணம் மார்க்கத்தில் இயக்கியும் சோதிக்கப்படுகிறது.

இதுகுறித்து, சென்னை ரயில்வே கோட்ட அதிகாரிகள் கூறியதாவது: சென்னை சென்ட்ரல் - அரக்கோணம் மார்க்கத்தில் தினசரி சுமார் 200க்கும் மேற்பட்ட மின்சார ரயில் சேவைகள் இயக்கப்படுகின்றன. இந்த ரயில்களில் தினசரி சுமார் 4 லட்சம் பேர் பயணிக்கின்றனர். தினசரி காலை, மாலையில் 'பீக் ஹவர்சில்' மின்சார ரயில்களில் கூட்டம் நிரம்பி வழிகிறது. கூடுதல் மின்சார ரயில்கள் மற்றும் ஏசி மின்சார ரயில் இயக்கவும் பயணிகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் விதமாக, இந்த மார்க்கத்தில் ஏசி மின்சார ரயில் இயக்குவது தொடர்பாக ஆலோசிக்கப் படுகிறது.

இதுபோல, செங்கல்பட்டு - கடற்கரை தடத்திலும் மேலும் ஒரு ஏசி மின்சார ரயில் இயக்கவும் பரிந்துரை உள்ளது. எனவே, எந்த மார்க்கத்தில் இயக்குவது என்பது குறித்து முடிவு செய்து, ஏசி மின்சார ரயில் சேவையை விரைவில் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. 12 பெட்டிகள் கொண்ட இந்த ரயிலில் அமர்ந்தபடி 1,116 பேரும், நின்று கொண்டு 3,798 பேரும் என மொத்தம் 4,914 பேர் பயணிக்க முடியும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# தமிழ்நாட்டில் வாக்குப்பதிவு முடிந்ததன் காரணமாக தேர்தல் நடத்தை விதிமுறைகளில் சில தளர்வுகள்

**சென்னை, ஏப்.25:** தமிழ்நாட்டில் வாக்குப்பதிவு முடிந்ததன் காரணமாக தேர்தல் நடத்தை விதிமுறைகளில் சில தளர்வுகள் அளிக்கப்பட்டுள்ளன. தமிழக சட்டமன்ற தேர்தல் நேற்று நிறைவடைந்த நிலையில் திரும்பப் தேர்தல் நடத்தை விதிமுறைகளில் சில தளர்வுகள் அளிக்கப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் பணப்பட்டுவாடாவை தடுக்க அமைக்கப்பட்ட பறக்கும் படை மற்றும் நிலையான கண்காணிப்பு குழு திரும்பப் பெறப்பட்டது. தேர்தலில் எந்த வாக்குச்சாவடியிலும் மறு வாக்குப்பதிவுக்கான அவசியம் இதுவரை எழவில்லை.

அனைத்து பூத்களிலும் பதிவான வாக்கு விபரங்களை தேர்தல் பார்வையாளர்கள் இன்று சரிபார்ப்பார்கள். இதில் குளறுபடி கண்டறியப்பட்டால் அந்த பூத்தில் மறுவாக்குப்பதிவு நடத்த தேர்தல் ஆணையத்திற்கு பரிந்துரை செய்யப்படும். தமிழகத்தில் மொத்தம் 62 இடங்களில் வாக்கு எண்ணிக்கை மையங்கள் அமைக்கப்பட உள்ளது. வாக்கு எண்ணிக்கை மையங்களில் துணை ராணுவம், போலீசார் இணைந்து 3 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

# சாத்தான்குளம் வழக்கு: 9 பேரின் மரண தண்டனையை உறுதி செய்ய சி.பி.ஐ. தரப்பில் முறையீடு



**மதுரை, ஏப்.25:** தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தை சேர்ந்த வியாபாரி ஜெயராஜ், அவரது மகன் பென்னிக்ஸ் ஆகியோர் கடந்த 2020-ம் ஆண்டில் விசாரணைக்காக அங்கு உள்ள போலீஸ் நிலையத்துக்கு அழைத்து செல்லப்பட்டனர். அவர்கள் இருவரையும் போலீசார் கடுமையாக தாக்கியுள்ளனர். இதில் படுகாயம் அடைந்த இருவரும் அடுத்தடுத்து பரிதாபமாக இறந்தனர். கொரோனா ஊரடங்கு உத்தரவு அமலில் இருந்த சமயத்தில் அவர்கள் இருவரும் இறந்த சம்பவம் நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்த சம்பவம் தொடர்பாக அப்போதைய போலீஸ் இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர், சப்-இன்ஸ்பெக்டர்கள் ரகு கணேஷ், பாலகிருஷ்ணன் உள்பட 10 போலீசார் கைதாகி மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். அதில் பால்துரை என்பவர் 2020-ம் ஆண்டு ஆகஸ்ட்டில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்தார்.


இந்த இரட்டைக் கொலை வழக்கை சி.பி.ஐ. விசாரித்தது. இந்த வழக்கு மதுரை மாவட்ட முதலாவது கூடுதல் செசன்சு கோர்ட்டில் நடக்கிறது. தந்தை, மகன் கொலை வழக்கில் கைதான 9 போலீஸ்காரர்களும் குற்றவாளிகள் என கடந்த 23-ந்தேதி நீதிபதி முத்துக்குமரன் தீர்ப்பளித்தார். அவர்களுக்கான தண்டனை விவரம் இன்று அறிவிக்கப்படும் என்று தெரிவித்திருந்தார்.

இந்த சூழலில் 9 போலீசாருக்கான தண்டனை விவரங்களை கடந்த 6ம் தேதி மதுரை மாவட்ட நீதிமன்ற நீதிபதி முத்துக்குமரன் வாசித்தார். அதில், காவல் நிலையத்தில் வைத்து இருவரும் காவல் சித்திரவதை செய்யப்பட்டு சாகடிக்கப்பட்டுள்ளனர். தந்தை முன் மகனையும், மகன் முன் தந்தையையும் அடைத்து வைத்து தாக்கியதை எளிதாக கருத முடியாது. இருவரும் நிராயுதபாணியாக இருந்தபோதும், இரவு முழுவதும் காவல் நிலையத்தில் வைத்து தாக்கியுள்ளனர். இருவரும் வியாபாரிகள். சமூகத்தில் நல்ல அந்தஸ்தில் இருப்பவர்கள். அவர்கள் மீது எந்த குற்றவழக்கும் இல்லை என்றே தெரிகிறது.

வழக்கில் கைது செய்யப்பட்ட 9 போலீசாருக்கும் மரண தண்டனை விதிப்பதே சிறந்தது. இதுபோன்ற வழக்குகளில் ஆயுள் தண்டனை வழங்கினால், இப்படி செயல்படும் போலீசாருக்கு அச்சம் ஏற்படாது. எனவே இந்த வழக்கில் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்ட இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர், சப்இன்ஸ்பெக்டர்கள் பாலகிருஷ்ணன், ரகு கணேஷ், தலைமைக் காவலர் முருகன், காவலர்கள் சாமதுரை, முத்துராஜ், செல்லதுரை, தாமஸ் பிரான்சிஸ், வெயில் முத்து ஆகிய 9 பேருக்கும் மரண தண்டனை விதிக்கப்படுகிறது. மேலும் இன்ஸ்பெக்டர் ஸ்ரீதருக்கு ரூ.15 லட்சம் அபராதம் விதிக்கப்படுகிறது" என்று அவர் தெரிவித்திருந்தார்.

வழக்கில் கைது செய்யப்பட்ட 9 போலீசாருக்கும் மரண தண்டனை விதிப்பதே சிறந்தது. இதுபோன்ற வழக்குகளில் ஆயுள் தண்டனை வழங்கினால், இப்படி செயல்படும் போலீசாருக்கு அச்சம் ஏற்படாது. எனவே இந்த வழக்கில் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்ட இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர், சப்இன்ஸ்பெக்டர்கள் பாலகிருஷ்ணன், ரகு கணேஷ், தலைமைக் காவலர் முருகன், காவலர்கள் சாமதுரை, முத்துராஜ், செல்லதுரை, தாமஸ் பிரான்சிஸ், வெயில் முத்து ஆகிய 9 பேருக்கும் மரண தண்டனை விதிக்கப்படுகிறது. மேலும் இன்ஸ்பெக்டர் ஸ்ரீதருக்கு ரூ.15 லட்சம் அபராதம் விதிக்கப்படுகிறது" என்று அவர் தெரிவித்திருந்தார்.

# சித்திரை உத்திர பெருவிழா உற்சவம்



காஞ்சிபுரம் கச்சபேஸ்வரர் திருக்கோவில் சித்திரை உத்திர பெருவிழா உற்சவம் கொடியேற்றத்துடன் தொடங்கியது...

# கோடைகாலத்தையொட்டி மின்தேவை புதிய உச்சம் ஒரே நாளில் 21 ஆயிரம் மெகாவாட் பதிவு: நடப்பாண்டில் 2வது முறையாக அளவை தாண்டியது



**சென்னை, ஏப்.25:** கோடைக்காலத்தையொட்டி தமிழகத்தில் மின் தேவை ஒரே நாளில் 21 ஆயிரம் மெகாவாட் பதிவாகியுள்ளதாக மின்வாரிய அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர். தமிழகத்தில் வெப்ப அலை வீசுவதால் பொதுமக்கள் வெளியே செல்ல அச்சப்பட்டு வீட்டிலேயே முடங்கி கிடக்கும் நிலை உருவாகி உள்ளது. இதன் காரணமாக வீடுகளில் இருக்கும் ஏசி, மின் விசிறி, டிவி, ஃபிர்ஜ் போன்றவற்றின் பயன்பாடு அதிகரித்து வருகிறது. அதன்படி, நடப்பாண்டில் இம்மாதம் மின்சார தேவை வெகுவாக அதிகரித்துள்ளது.

முன்னதாக ஏப்ரல் 17ம் தேதி 21 ஆயிரத்தை தாண்டி மின் தேவை இருந்தது. இந்நிலையில் 2வது முறையாக ஏப்ரல் 21ம் தேதி (செவ்வாய்க்கிழமை) 21 ஆயிரத்தை தாண்டியுள்ளதாக மின்வாரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். குறிப்பாக கடந்த செவ்வாய் கிழமை இரவு 10.30 மணியளவில் அதிகப்படியான மின் தேவை ஏற்பட்டிருப்பது ஆச்சரியம் அளித்துள்ளது. உதாரணமாக ஏப்ரல் 21ம் தேதி மின்சார பயன்பாடு 462.38 மில்லியன் யூனிட்களாக இருந்தது. அதில் தமிழக மின்சார வாரியத்தின் நடவடிக்கையால் நிலக்கரி, எரிவாயு, ஹைட்ரோ பிளாண்ட்கள் மூலம் 77 மில்லியன் யூனிட்கள் கிடைத்தன.

மத்திய பவர் பிளாண்ட்கள் மூலம் 127 மில்லியன் யூனிட்கள் பெறப்பட்டன. எஞ்சிய 86.5 மில்லியன் யூனிட்கள் வெளி சந்தையில் குறுகிய மற்றும் நீண்ட கால ஒப்பந்த அடிப்படையில் வாங்கப்பட்டவையாகும். இதுகுறித்து அதிகாரிகள் கூறியதாவது: இன்னும், கத்திரி வெயில் தாக்கம் தொடங்காத நிலையில் இது போன்ற தேவைகள் உருவாகி உள்ளது இது வாரியத்திற்கு ஒரு சவாலானது தான். காரணம் பள்ளி, கல்லூரிகள் விடுமுறை என்பதால் மாணவ, மாணவிகள் வீடுகளில் முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே மின் விசிறி, ஏசி, கூலர் போன்றவற்றின் பயன்பாடு அதிகரித்துள்ளது. ஏற்கனவே அரசு அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள், வர்த்தக கட்டடங்கள், பொழுதுபோக்கு கூடங்கள், மால்கள் உள்ளிட்டவற்றின் ஏசி பயன்பாடு அதிகமாக இருக்கும். இதனுடன் வீடுகளிலும் ஏசி பயன்பாடு அதிகரித்திருக்கிறது. முன்பு பணம் படைத்தவர்களின் வீடுகளில் இருந்த ஏசி மற்றும் ஃப்ரிஜ் போன்ற உபயோக பொருட்கள் இப்போது நடுத்தர குடும்பங்களிலும் வந்துள்ளதால், மின் தேவை என்பது இயல்பாகவே அதிகரிக்கும்.

அதனை சமாளிக்க தான் பல்வேறு வழிகளில் மாநிலத்தில் தடையின்றி மின்சாரத்தை வழங்குவதில் மின்வாரியம் முனைப்பு காட்டுகிறது. நிலக்கரி எரிபொருள் மட்டுமின்றி சூரிய சக்தியையை பயன்படுத்தி மின்சார தயாரிப்பை முடுக்கி விட்டுள்ளோம். இதுதவிர, சூரிய மின் சக்தி, காற்றாலை போன்வற்றில் இருந்தும் மின்சார தேவை பூர்த்தி செய்யும் வகையில் உற்பத்தி செய்யப்படுகிறது. மேலும், கோடைகாலத்தை கருத்தில் கொண்டு பொதுமக்களும் சிக்கனமாக மின்சாரத்தை கையாளும் பட்சத்தின் மின்வெட்டு பிரச்சனை என்பது இருக்காது அதனையும் விழிப்புணர்வாக நுகர்வோரிடம் எடுத்து செல்ல திட்டமிட்டுள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

# ஓமலூர் அருகே பயங்கரம்- கள்ளக்காதலியின் மகனை வெட்டிக்கொன்ற தனியார் நிறுவன மேலாளர் தற்கொலை



**சேலம், ஏப்.25:** சேலம் மாவட்டம் ஓமலூரரை அடுத்த பொட்டியபுரம் ஊராட்சி கருத்தானூர் பகுதியைச் சேர்ந்தவர் சிவன். இவருக்கு சத்யா (33) என்ற மகளும் அசோக்குமார் என்ற மகனும் உள்ளனர். சத்யாவிற்கு கடந்த 15 வருடங்களுக்கு முன்பு காமலாபுரம் ஊராட்சி பூமாரியம்மன் கோவில் பகுதியை சேர்ந்த ராஜ்குமார் என்பவருடன் திருமணம் நடைபெற்றது. இவர்களுக்கு மஹிஷா (13) என்ற மகளும், கிஷாந்த் என்ற 10 வயது மகனும் உள்ளனர். கருத்தானூர் அருகே உள்ள அரசு பள்ளியில் மஹிஷா 7-ம் வகுப்பும், கிஷாந்த் 5-ம் வகுப்பும் படித்து வருகின்றனர்.

இந்நிலையில் சத்யா தனது கணவருடன் சேர்ந்து கருத்தானூரில் உள்ள தனது தந்தையின் நிலத்தில் கரும்பு ஆலை அமைத்து வெல்லம் தயாரிக்கும் தொழில் செய்து வந்தார். கடந்த 2 வருடங்களுக்கு முன்பு ராஜ்குமார் சத்யாவை விட்டு விட்டு வேறு ஒரு பெண்ணுடன் குடும்பம் நடத்தி வருவதாக கூறப்படுகிறது.

இதனால் சத்யா தனது மகன், மகளுடன் கரும்பு ஆலையிலேயே தனியாக வசித்து வருகிறார். தற்போது சத்யா ஓமலூரில் உள்ள ஒரு வீட்டு உபயோக விற்பனை செய்யும் தனியார் ஷோரூமில் வேலை பார்த்து வருகிறார்.

இந்த நிலையில் அந்த ஷோரூமில் மேலாளராக வேலை பார்க்கும் கருப்பூர் வெள்ளாளப்பட்டி காலனி பகுதியைச் சேர்ந்த சக்திவேல் என்பவருக்கும், சத்யாவுக்கும் கள்ளத்தொடர்பு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் கடந்த 3 மாதங்களாக சக்திவேலிடம் சத்யா சரியாக பேசவில்லை என கூறப்படுகிறது. மேலும் வேறு ஒரு நபருடன் சத்யா தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு தன்னிடம் பேசாமல் இருப்பதாக சக்திவேல் சந்தேகம் அடைந்தார்.

உடலில் வெட்டு காயங்களுடன் ஒரு கை மணி கட்டு துண்டான நிலையில் சத்யா சத்தம் போட்டு கொண்டு அவரது அப்பா வீட்டை நோக்கி ஓடி சென்றார். சத்தம் கேட்டு உடனடியாக அவரது தந்தை மற்றும் உறவினர்கள் ஓடிச் சென்று பார்த்தனர். அப்போது அங்கு சிறுவன் கிஷாந்த் தலை மற்றும் கழுத்தில் கத்தி குத்து காயங்களுடன் உயிருக்கு போராடிக் கொண்டிருந்தான்.


மேலும் சத்யாவும் பலத்த காயத்துடன் அலறித்துடித்தார். இதையடுத்து தாய், மகன் 2 பேரையும் மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு பரிசோதனை செய்த மருத்துவர்கள் சிறுவன் கிஷாந்த் இறந்து விட்டதாக தெரிவித்துள்ளனர்.

போலீசார் நடத்திய விசாரணையில் தனியார் ஷோரும் மேலாளர் சக்திவேலுக்கும், சத்யாவுக்கும் இடையே கள்ளக்காதல் இருப்பதும், இதன் காரணமாக ஏற்பட்ட தகராறில் இந்த கொலை நடந்ததும் தெரிய வந்தது. இதையடுத்து தப்பி ஓடிய சக்திவேலை போலீசார் தேடி வந்தனர்.

இந்த நிலையில் சேலம் கருப்பூர் வெள்ளாளப்பட்டி அருகில் உள்ள கோரிமேடு காட்டுப்பகுதியில் சக்திவேல் மரத்தில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டதாக தெரிய வந்தது. இதையடுத்து கருப்பூர் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று தற்கொலை செய்த சக்திவேல் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக சேலம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

தற்கொலை செய்த சக்திவேலுக்கு திருமணமாகி மனைவி மற்றும் 2 குழந்தைகள் உள்ளனர். சத்யாவுடன் சக்திவேலுக்கு கள்ளத்தொடர்பு இருந்ததால் கருத்து வேறுபாடு ஏற்பட்டு கடந்த 6 மாதமாக அவரது மனைவி பிரிந்து வாழ்ந்து வருவது தெரியவந்தது.

# சேற்றில் சிக்கிய குட்டி யானையை பத்திரமாக மீட்ட வனத்துறையினர்



**நீலகிரி, ஏப்.25:** நீலகிரி மாவட்டம் ஓவேலி வனச்சரகத்திற்கு உட்பட்ட ஓவேலி மேற்கு பிரிவு அம்புலிமலைக்கு யானைகள் கூட்டம் நேற்று காலை வந்தது.

அப்போது அந்தகூட்டத்தை சேர்ந்த ஒரு குட்டி யானை தனியாக பிரிந்து விதுலாவேலி எஸ்டேட் ஓடைக்கு தண்ணீர் குடிக்க சென்றது. அந்த நேரத்தில் அந்த யானை சேற்றுக்குள் வசமாக சிக்கி கொண்டது.

இந்த சம்பவத்தை நேரில் பார்த்த பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்தனர். பின்னர் இதுகுறித்து மாவட்ட வன அலுவலருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

தகவலின்பேரில் ஓவேலி வனச்சரக பணியாளர்கள் மற்றும் அதிவிரைவு படையினர் உடனடியாக சம்பவ பகுதிக்கு விரைந்து சென்று பார்வையிட்டனர்.

அப்போது குட்டி யானை சேற்றுக்குள் சிக்கி தவிப்பது தெரிய வந்தது. தொடர்ந்து அந்த யானையை வனத்துறையினர் பத்திரமாக மீட்டனர்.

பின்னர் மீட்கப்பட்ட குட்டி யானையை அருகில் உள்ள யானைகள் கூட்டத்துடன் மீண்டும் சேர்ப்பதற்கான முயற்சிகள், வனத்துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டன. அப்போது குட்டி மீட்கப்பட்ட வனப்பகுதிக்கு அருகே காட்டு யானைகள் கூட்டமாக நிற்பது கண்டறியப்பட்டது.

தொடர்ந்து அந்த குட்டியை வனத்துறையினர் சம்பந்தப்பட்ட பகுதிக்கு கொண்டு சென்று விடுவித்தனர். அதன்பிறகு அந்த குட்டி யானை மீண்டும் தாயுடன் சேர்ந்து கூட்டமாக அடர்வனப்பகுதிக்கு திரும்பி சென்றது.

ஓவேலி வனச்சரக பகுதியில் சேற்றுக்குள் சிக்கிய குட்டி தாய் யானையுடன் சேர்க்கப்பட்டதால் அப்பகுதி மக்கள் நிம்மதி அடைந்தனர். இதற்கிடையே மீட்கப்பட்ட குட்டி யானையின் நலனை உறுதிப்படுத்தும் வகையில் சிறப்புக்குழு அமைக்கப்பட்டு உள்ளது. இந்த குழுவினர் தொடர்ந்து குட்டி யானையின் நடமாட்டத்தை தீவிரமாக கண்காணித்து வருகின்றனர்.

# சட்டப்பேரவை தேர்தலுக்காக சென்னையில் இருந்து 6.27 லட்சம் பேர் பயணம்: அதிகாரிகள் தகவல்



**சென்னை, ஏப்.25:** சட்டப்பேரவை தேர்தலில் வாக்களிக்க சென்னையில் இருந்து இதுவரை 6.27 லட்சம் பேர் பயணம் மேற்கொண்டுள்ளதாக போக்குவரத்து அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர். தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்காக வாக்களிக்க பொதுமக்கள் சொந்த ஊர் செல்ல வசதியாக போக்குவரத்து துறை தரப்பில் சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. அதன்படி நேற்று காலை நிலவரப்படி வழக்கமாக இயக்கப்படும் 2,580 பேருந்துகள் முழுமையாக இயக்கப்பட்டதுடன் கூடுதலாக 4,158 சிறப்பு பேருந்துகளும் இயக்கப்பட்டன.

ஒட்டு மொத்தமாக 10,169 பேருந்துகள் இயக்கப்பட்டு 6.27 லட்சம் பேர் பயணம் மேற்கொண்டனர். மேலும், தேர்தல் தினமான நேற்றைய தினம் மதியம் வரை இந்த சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டன. இதன் காரணமாக தொலைத்தூர பயணம் மேற்கொண்ட பலர் சரியான நேரத்திற்கு சொந்த ஊர்களுக்கு வழிவகை செய்யப்பட்டன. மேலும், விடுமுறைக்காக சென்றுள்ளவர்கள் மீண்டும் சென்னை மற்றும் பிற இடங்களுக்கு திரும்பி வருவதற்கான ஏற்பாடுகளையும் போக்குவரத்து துறை தரப்பில் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# 2025-26-ம் நிதியாண்டில் 7,914 ரெயில் பெட்டிகள் தயாரிப்பு - ரெயில்வே தகவல்



**சென்னை, ஏப்.25:** இந்தியாவில் ரெயில் பயணிகள் எண்ணிக்கை மற்றும் தேவைகளுக்கு ஏற்ப பல்வேறு புதிய மாற்றங்களை ரெயில்வே வாரியம் கொண்டு வருகிறது. குறிப்பாக, பழைய ரெயில் பெட்டிகளுக்கு பதிலாக, நவீன மற்றும் பாதுகாப்பான எல்.எச்.பி. பெட்டிகள் தயாரிப்பை அதிகப்படுத்தியுள்ளது. இந்தியாவில் சென்னை பெரம்பூர் ஐ.சி.எப். தொழிற்சாலை, பஞ்சாப் கபூர்த்தலாவில் உள்ள ஆர்.சி.எப். தொழிற்சாலை, உத்தரபிரதேசத்தில் உள்ள எம்.சி.எப். தொழிற்சாலை ஆகிய 3 ரெயில் பெட்டி தொழிற்சாலைகள் உள்ளது.

இங்கு எக்ஸ்பிரஸ், பயணிகள் ரெயில், மின்சார ரெயில் உள்பட அனைத்து வகை ரெயில் பெட்டிகளும் தயாரிக்கப்பட்டு வருகிறது. ரெயில் பெட்டிகள் உற்பத்தி செய்யும் பணி ஆண்டுதோறும் கணிசமாக உயர்ந்து வருகிறது. அதன்படி, 2025-26-ம் நிதியாண்டில் 7,914 ரெயில் பெட்டிகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

இது கடந்த (2024-25) நிதியாண்டில் தயாரிக்கப்பட்ட 7,134 ரெயில் பெட்டிகளைவிட 11 சதவீதம் அதிகமாகும். அதிகரித்து வரும் பயணிகள் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக ரெயில்வே உள்கட்டமைப்பை நவீனமாக்குவதில் இந்திய ரெயில்வே தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. 2004-2014 இடையே இந்திய ரெயில்வே ஆண்டுக்கு சராசரியாக 3,300-க்கும் குறைவான பெட்டிகளையே உற்பத்தி செய்தது.

தற்போது மேம்பட்ட இணைப்பு மூலம் உற்பத்தி வெகுவாக அதிகரித்திருப்பதாக ரெயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

# நீலகிரி: சட்டசபைதேர்தல் காரணமாக மூடப்பட்டிருந்த சுற்றுலாத் தலங்கள் மீண்டும் திறப்பு

**நீலகிரி, ஏப்.25:** தமிழகத்தில் சட்டமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு நேற்று ஒரே கட்டமாக நடந்தது. நீலகிரி மாவட்டத்தில் சுற்றுலா தலங்கள் மூடப்படாது என மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா அறிவித்து இருந்தார். இந்தநிலையில் நேற்று தேர்தலை முன்னிட்டு, நீலகிரி வன கோட்டத்தில் வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ள சுற்றுலா தலங்கள் மூடப்படுவதாக வனத்துறை அறிவித்தது.

இதன்படி தொட்டபெட்டா மலைச்சிகரம், அவலாஞ்சி, பைன்பாரஸ்ட், பைக்காரா நீர்வீழ்ச்சி, பைக்காரா படகு இல்லம் ஆகிய 5 சுற்றுலா தலங்கள் மற்றும் சூழல் சுற்றுலா குழுக்கள் மூலம் நடத்தப்படும் சுற்றுலா தலங்கள் மூடப்பட்டன.

முன்னறிவிப்பு இல்லாமல் இந்த சுற்றுலா தலங்கள் மூடப்பட்டதால், கேரளம், கர்நாடகா மாநிலங்களில் இருந்து வந்திருந்த சுற்றுலா பயணிகள் ஏமாற்றமடைந்தனர். சுற்றுலா தலங்கள் முன்பு நின்று புகைப்படங்களை எடுத்துக்கொண்டு, சிறிது நேரம் இளைப்பாறி விட்டு ஏமாற்றத்துடன் திரும்பி சென்றனர்.

இந்தநிலையில், தமிழகத்தில் வாக்குப்பதிவு நிறைவை அடுத்து, தேர்தல் நன்நடத்தை விதிகளில் தளர்வு அறிவிக்கப்பட்டது. பறக்கும் படைகள், நிலையான கண்காணிப்பு குழு திரும்ப பெறப்பட்டன. இதனையடுத்து

நீலகிரியில் சட்டசபை தேர்தல் காரணமாக நேற்று மூடப்பட்டிருந்த சுற்றுலாத் தலங்கள் இன்று மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. தொடர் விடுமுறை காரணமாக அதிகளவில் சுற்றுலாப் பயணிகள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கள்ளழகர் ஆற்றில் இறங்கும் விழாவுக்காக வைகை அணையிலிருந்து நீர் திறப்பு

**மதுரை, ஏப்.25:** மதுரை சித்திரை திருவிழா என்பது சைவமும், வைணவமும் இணைந்த உலகப்புகழ் பெற்ற ஒப்பற்ற விழா ஆகும். இதில் மீனாட்சி-சுந்தரேசுவரர் திருக்கல்யாணம், மாசி வீதிகளில் தேரோட்டம், கள்ளழகர் எதிர்சேவை, வைகை ஆற்றில் அழகர் இறங்கி அருள்பாலிக்கும் வைபவம் ஆகியவை முத்தாய்ப்பு நிகழ்ச்சிகள் ஆகும்.

இவ்வாறு முத்திரை பதிக்கும் இந்த சித்திரை பெருவிழா கடந்த 19-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழா நாட்களில் சுவாமியும், அம்மனும் பல்வேறு வாகனங்களில் நான்கு மாசி வீதிகளில் வலம் வந்து காட்சி அளிப்பார்கள். 26-ந் தேதி முதல் முக்கிய நிகழ்ச்சிகள் தொடங்குகின்றன. அன்று இரவு 7.05 மணி முதல் 7.29 மணிக்குள் மீனாட்சி அம்மன் பட்டாபிஷேகம் நடக்கிறது. 27-ந் தேதி திக்கு விஜயம் நடைபெறுகிறது.

சிகர நிகழ்ச்சியாக மீனாட்சி-சுந்தரேசுவரர் திருக்கல்யாண வைபவம் 28-ந் தேதி நடக்கிறது. 29-ந் தேதி மாசி வீதிகளில் தேரோட்டம் நடைபெறும். இதற்கிடையே கள்ளழகர் கோவில் சித்திரை விழாவில் 29-ந் தேதியன்று அழகர் மதுரை புறப்படுகிறார்.

30-ந் தேதி கள்ளழகர் எதிர்சேவையும், மே 1-ந் தேதி கள்ளழகர் வைகை ஆற்றில் எழுந்தருளும் வைபவமும் நடைபெறுகின்றன. இதற்கான ஏற்பாடுகளை கோவில் நிர்வாகத்தினர் செய்து வருகின்றனர்.

இந்த நிலையில், மதுரையில் கள்ளழகரகை ஆற்றில் இறங்கும் விழாவுக்காக வைகை அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. விநாடிக்கு 500 கன அடி வீதம் 6 நாட்களுக்கு ஆற்றில் தண்ணீர் திறக்கப்படுகிறது. வைகை அணையிலிருந்து நீர் திறக்கப்படுவதால் தேனி, மதுரை மாவட்ட மக்களுக்கு வெள்ள எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பகல் நேரத்தில் வெயில் தாக்கம் அதிகமாக உள்ளதால், இரவில் தண்ணீர் திறக்கப்பட உள்ளது.

ஆரம்பத்தில் கூடுதலாக தண்ணீர் திறக்கப்பட்டு பின்னர் படிப்படியாக குறைக்கப்படும் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்..




# சோதனை நடத்துவது தப்பு கிடையாது.. உண்மையை மறைப்பது ஏன்? - செல்வப்பெருந்தகை

**சென்னை, ஏப்.25:** தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை வீட்டில் சட்டசபை தேர்தலுக்கு முன்னதாக கடந்த 20 ஆம் தேதி வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனை நடத்தியதாக தகவல் வெளியானது. அதைத் தொடர்ந்து, சீருடை இல்லாமல் வருமான வரித்துறையினர் என சொல்லிக் கொண்டு, இந்தி பேசும் நபர்கள், தன் வீட்டில் சோதனை நடத்தியதாகவும், ராகுல் பிரசாரத்திற்கு செல்ல முடியாத வகையில் தடுக்கப்பட்டதாகவும் செல்வப்பெருந்தகை குற்றஞ்சாட்டினார்.

ஆனால் "செல்வப்பெருந்தகை சொன்னது போல், அவரது வீட்டில் சோதனை எதுவும் நடத்தவில்லை" என வருமான வரித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். கடந்த 20-ம் தேதி அன்றோ அல்லது அதற்கு சமீபத்திய தேதிகளிலோ செல்வப்பெருந்தகைக்கு எதிராக வருமான வரித்துறையினரால் எந்தவிதமான சோதனையோ ஆய்வோ அல்லது அமலாக்க நடவடிக்கைகளோ மேற்கொள்ளப்படவில்லை, சென்னை கீழ்ப்பாக்கத்தில் உள்ள அவரது இல்லம் உட்பட எந்தவொரு இடமும், வருமானவரித்துறையின் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படவில்லை என வருமான வரித்துறை விளக்கம் அளித்தது.

இந்த நிலையில், வருமான வரித்துறை சோதனை தொடர்பான முழு ஆதாரங்களை வெளியிட்டு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:-

தேர்தல் நேரத்தில் ஏன் இதுபோன்று அச்சுறுத்த வேண்டும்?. சோதனை நடத்தியதால்தான் ராகுல் காந்தியின் பரப்புரைக்கு என்னால் செல்ல முடியவில்லை?. வீட்டின் வாசலில் இருந்த சிசிடிவியை மட்டும் அணைக்காமல் விட்டதால் இந்த ஆதாரம் கிடைத்தது; சோதனைக்கு வந்த அதிகாரிகளைக் கண்டறிந்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காஞ்சிபுரம் மாவட்ட திமுக பிரமுகர் படப்பை மனோகரன் வீட்டில் நான் இருந்தபோது சோதனை நடந்தது. சோதனை என்ற பெயரில் மனோகரனின் வீட்டுக்கு வந்த அதிகாரிகள் சிசிடிவியை அணைத்தன. வீட்டுக்குள் நுழைந்ததும் 'பணம் எங்கே?" எனக் கேட்டு அதிகாரிகள் மிரட்டினர்.

சோதனை செய்யவில்லை என வருமான வரித் துறை அதிகாரிகள் மறுப்பு கூறுகின்றனர். சோதனை நடத்துவது தப்பு கிடையாது.. உண்மையை மறைப்பது ஏன்?. வருமான வரித்துறை வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும்.

சட்டமன்றத் தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்கள் வெற்றி பெறுவார்கள். முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆட்சி தொடர வேண்டும் என்று மக்கள் விரும்புகிறார்கள். மே 4-ம் தேதி திமுக கூட்டணி வேட்பாளர்கள் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெறுவார்கள் என கூறினார்.

# கரூரில் ஏன் வாக்களிக்கவில்லை?- செந்தில் பாலாஜி விளக்கம்

**கரூர், ஏப்.25:** கடந்த 2021 சட்டமன்ற தேர்தலில் கரூர் மாவட்ட தி.மு.க. செயலாளரும், முன்னாள் அமைச்சருமான வி.செந்தில்பாலாஜி போட்டியிட்டார். இந்த முறையும் கரூரிலேயே போட்டியிடலாம் என்று அவரது ஆதரவாளர்கள் எதிர்பார்த்திருந்த நிலையில், அவர் கோவை தெற்கு தொகுதியில் போட்டியிடுகிறார்.

மேற்கு மண்டல பொறுப்பாளராக இருந்துவரும் வி.செந்தில்பாலாஜி, கரூரும், கோவையும் தனது இரண்டு கண்களை போன்றது. நான் கோவையில் போட்டியிட்டாலும் தனது உயிர் போன்றது கரூர் தொகுதி என்று தெரிவித்து இருந்தார்.

கடந்த 2016 மற்றும் 2021 சட்டமன்ற தேர்தல்களில் கோவை மாவட்டத்தில் உள்ள அனைத்து தொகுதிகளையும் அ.தி.மு.க.வே கைப்பற்றியது. எனவே இந்தமுறை கோவையை தி.மு.க.வின் கோட்டையாக மாற்றவேண்டும் என்ற இலக்குடன் வி.செந்தில பாலாஜி மேற்கு மண்டல தி.மு.க. பொறுப்பாளராக நியமிக்கப்பட்டு தேர்தல் பணிகளை மும்முரமாக மேற்கொண்டு வந்தார்.

இந்தநிலையில் அவருக்கு கரூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ராமேஸ்வரப்பட்டியில் வாக்குரிமை உள்ளது. அவர் அங்கு வாக்களிக்க வருவார் என்று அவரது ஆதரவாளர்கள் எதிர்பார்த்திருந்த நிலையில் கடைசி நேரம் வரை அவர் வாக்களிக்க வராதது பல்வேறு கேள்விகளை எழுப்பியது. இது தொடர்பாக வி.செந்தில் பாலாஜியை தொடர்புகொண்டு வாக்களிக்க வராதது குறித்து கேட்டபோது, கோவை தெற்கு தொகுதியில் காலை முதல் மாலை வரை அனைத்து வாக்குச்சாவடிக்கும் சென்று கண்காணித்து வந்ததாகவும், மேலும் தெற்கு தொகுதி பதற்றம் நிறைந்த பகுதியாக காணப்பட்டதாலும் அங்கேயே முகாமிட்டு இருந்ததாகவும் அவர் கூறினார்.

இதன் காரணமாக தனது வாக்கினை கரூர் தொகுதியில் செலுத்த முடியாமல் போனதாக அவர் விளக்கம் அளித்துள்ளார்.

# பரங்கிப்பேட்டை நகரச் செயலாளர் மீதான வன்முறை: காவல்துறைக்கு ராமதாஸ் தரப்பு கண்டனம்

**சென்னை, ஏப்.25:** பாமக செயல் தலைவர் ஸ்ரீகாந்தி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

பாட்டாளி மக்கள் கட்சியின் மீதும், அதன் கொள்கை வழிமுறைகள் மீதும் மிகுந்த பற்று கொண்டவர் பரங்கிப்பேட்டை நகரச் செயலாளர் கவியரசு. மருத்துவர் அய்யாவின் வழிகாட்டுதலில் மக்கள் பணியாற்றி வரும் அவர் மீது, நேற்று (23.04.2026) நடத்தப்பட்ட திட்டமிட்ட கொடூரத் தாக்குதல் மிகுந்த மனவேதனையையும், பெரும் அதிர்ச்சியையும் அளிக்கிறது.

ஜனநாயக ரீதியாகச் செயல்படும் ஒரு அரசியல் நிர்வாகி மீது, வன்முறையை ஏவிவிடுவது என்பது நாகரிகமான அரசியலுக்கு அழகல்ல. மாற்றுக் கருத்துகளை வாதங்களால் எதிர்கொள்ள வேண்டுமே தவிர, ஆயுதங்களால் அல்ல. குற்றவாளிகள் மீது பாரபட்சமற்ற நடவடிக்கை தேவை இந்தத் தாக்குதல் சம்பவத்தில் தொடர்புடையதாகக் கூறப்படும் கீழ்க்கண்ட நபர்கள் மீது காவல்துறை உடனடியாகச் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் தம்பி கவியரசுக்கு உயர்தர மருத்துவச் சிகிச்சை வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். அவருக்குத் தேவையான அனைத்துப் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் காவல்துறை உடனடியாக வழங்க வேண்டும் என வலியுறுத்துகிறேன்.

அமைதி காக்கும் எங்களை, அறப்போராட்டக் களத்திற்குத் தள்ள வேண்டாம் என அரசை எச்சரிக்கிறேன். உடனடியாகக் குற்றவாளிகளைக் கைது செய்து, சட்டத்தின் முன் நிறுத்தி உரிய தண்டனைப் பெற்றுத்தர வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

PUBLISHED BY R.S ROSHINE PRINTED BY R.S. ROSHINE ON BEHALF OF R.S. ROSHINE PRINTED AT J.M. PROCESS, NO 29, V.N. DOSS ROAD, BORDERTHOTTAM, MOUNT ROAD, CHENNAI – 600002.
AND PUBLISHED FROM NO. 42/62, BUCHAMMAL STREET, 1ST FLOOR, NEW WASHERMENPET, TONDIARPET, CHENNAI, TAMILNADU – 600081. EDITOR: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: ANANDABHASKARNEWS@GMAIL.COM